# ஜாமக்காரன்

# JAMAKKARAN

ஜாமக்காரன் JAMAKKARAN

**(ஜாமக்காரனில்)** எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதை பிடித்துக்கொள்ளுங்கள். 1 தெச. 5:21
ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான். ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி. 2:15

**VOLUME - 4 Reg NO.TNBIL/2016/70171 ISSUE - 6**

**JUNE 2020 TAMIL & MALAYALAM**

**ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=**



Mob.: No. **9894261333** இந்த எண். **SMS** உபயோகத்துக்காக மட்டும்

**0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com**


கர்த்தருக்குள் அன்பானவர்களே !



உங்களுக்கு இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்.

கொரோனா கிருமியினால் பாதிப்படைந்த **முழு உலகமும் பழைய இயல்பு வாழ்க்கைக்குத் திரும்ப முடியாமலே போகலாம்** என்று **உலக சுகாதார அமைப்பு** (World Health Organisation) WHO உலக சுகாதார அமைப்பு நம்மை எல்லாரையும் பயப்படுத்தும் பயங்கர அறிவிப்பை அறிவித்ததை வாசித்தீர்களா ? ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வாரமும் கெரோனா கிருமியின் அழிவு தீவிரமடைந்து கொண்டே போகிறது.

நம் தமிழ்நாட்டு மந்திரிகளும், மத்திய அரசின் மந்திரிகளும் அடுத்த வாரம் கொரோனா தாக்கம் தனிய போகிறது என்றும் கூறியது இவர்கள் இந்த வருடம் முழுவதும் கிருமியின் தாக்கம் இருக்கும் என்றும் **டிசம்பர்** மாதம் கொரோனா தாக்கம் **உச்சத்தை** அடையலாம் என்று விதவிதமான அறிவிப்புகளை அறிவித்துக்கொண்டே இருக்கிறார்கள்.

ஒன்று நிச்சயம் இப்போதைக்கு நாம் யாரும் வீட்டைவிட்டு வெளியே தலைகாட்ட முடியாது. நானும் எந்த வெளி ஊர்களுக்கோ, மலை ஊழியத்துக்கோ போகாமல் ஏறக்குறைய 130 நாட்கள் வீட்டுக்குள் குடும்பமாய் அடைந்து கிடக்கிறேன். சினிமா வெற்றி விழா கொண்டாடுவார்களே அதைப்போல நான் அடைந்து கிடக்கும் 130வது வெற்றி நாள் என்று கூறி கொண்டாட முடியாமல் இருக்கிறேன்.


# JUNE - 2020

என்னைப்போல் எத்தனை ஊழியர்கள் (ஊழியங்கள்) முடங்கிபோய் கிடக்கிடக்கிறார்கள். **தினக்கூலி** வாங்குபவர்கள். **மாத சம்பளம்** வாங்கும் நடுத்தர குடும்பங்களும் கொஞ்ச கொஞ்ஜமாக வருமை கோட்டிற்கு கீழ் நோக்கி போய் கொண்டிருக்கின்றனர். நாட்டின் மக்கள், உலக மக்கள் இனி என்ன செய்ய முடியும் ? **விஞ்ஞானிகள்** கைவிட்டுவிட்டார்கள். அரசியல் வாதிகளும் மந்திரிமார்களும் வெட்டி ஜம்பமாக கோரோனாவில் சுகம்பெற்று வெளியேரியவர்களின் எண்ணிக்கையை மட்டும் பெரிதாக காட்டி ஓய்ந்துபோய்விட்டனர். இப்போதுதான் நம் முதல்வரின் வாயிலிருந்து **இனி கடவுள்தான்** காப்பாற்ற வேண்டும் என்று வெளிப்படையாக கூறிவிட்டார்.

நிலைமை இப்படியிருக்க நம் TV ஊழியர்களோ **தங்கள் அழும் முகங்களை** தினசரி காலையும் மாலையும் மிக அருகே படம் பிடித்து காண்பித்து கூடவே **காணிக்கை அனுப்ப சொல்லி** அறிவிக்கிறார்கள். அவரவர்கள் **கட்டிடங்களை கட்ட** சதுர அடிக்கு **இவ்வளவு கொடுங்கள்** என்று நாட்டின் **நிலைமையின் கோரம்** அறிந்தும் வாய் கூசாமல் **காணிக்கை கேட்கிறார்கள்.** இப்போதுள்ள சூழ்நிலையில் அந்த **கட்டிட பணிகளை நிறுத்திவைத்தால் என்ன ?**

நாளுக்கு நாள் வேலையில்லா தினடாட்டமும் வருமையும் கூடிக்கொண்டே போகிறது. கிறிஸ்தவ குடும்பங்களில் பலர் சாப்பாட்டுக்கு வழியில்லாமல் ஜெபம் செய்ய அழுகையுடன் கூடிய கடிதம் எழுதுகிறார்கள். இப்படிப்பட்டவர்களிடம் பணம் கேட்கும் இப்படிப்பட்ட ஊழியர்களுக்கு **மன சாட்சி இல்லையா ?**

இந்தியாவின் **பார்லிமெண்ட் கட்டிடம்** ஆள் உயர பாறையில் கட்டப்பட்ட பழமையான கலாச்சார உறுதியான கட்டிடமாகும். ஆனால் இப்போதுள்ள **காவி கட்சி** வாஸ்து சாஸ்திரப்படி அந்த பழைய பார்லிமெண்ட் கட்டிடத்துக்கு பதில் **பல லட்ச கோடிகள்** செலவழித்து **நவீன முறையில்** புதிய **பார்லிமெண்ட் கட்டிடம்** கட்ட ஏற்பாடுகளை செய்துவிட்டனர். இந்த நாடே **கொரோனாவின் கோர பிடியில்** அகப்பட்டு உள்ள இந்த சமயத்தில், பெரும் கோடீஸ்வரர்கள்கூட பல கோடி ரூபாய்கள் வட்டி செலுத்த முடியாமல் **குடும்பத்தோடு தற்கொலை** செய்கிறார்கள்.

வேலையில்லா பட்டதாரிகள் குடும்பமே பட்டினியால் அவதிபடுவதால் அரசாங்கம் அறிவித்த 100 நாள் **வேலை திட்டத்தில்** தினசரி கூலியாக 180 ரூபாய் வாங்கி ஜீவிக்கும் அவல நிலையில் வாழும்போது **பஞ்ஜம்** நாட்டில் கோர தாண்டவம் ஆடும்போது **புதிய பார்லிமெண்ட் கட்டிடத்துக்கு** அத்தனை கோடிகளை செலவழிக்க வேண்டுமா? நாட்டு தலைவர்களுக்கும் **மக்கள்மேல் அக்கரை இல்லை.** ஊழியக்காரர்களுக்கும் தற்போதைய மக்களின் வறுமை நிலையை விளங்கிக் கொள்ளாமல் **தங்கள் கட்டிடங்களை கட்ட** சதுரடிக்கு இத்தனை ஆயிரம் ரூபாய் கொடுத்தால் **ஆசீர்வாதம் பெருகும்** என்று தயங்காமல் **பொய் சொல்லி** TVயில் **நீலி கண்ணீர்** வடிக்கிறார்கள். மக்கள் தயவுசெய்து இப்படிப்பட்ட ஊழியர்களை புரிந்துகொண்டு அவர்களிடம் ஜாக்கிறதையாக இருங்கள் என்று அறிவிப்பதை தவிற ஜாமக்காரனாகிய நான் வேறு என்ன செய்ய முடியும்? **ஜுன் மாத** பத்திரிகை **ஜுலை மாத** கடைசியில் வெளியிடுகிறேன். **ஜு லை மாத** பத்திரிகை **ஆகஸ்ட் மாதம்** வெளிவரும் ஜெபிக்கிறேன். ஜெபியுங்கள் இந்த கொரோனா வருமை காலத்திலும் பத்திரிகையை வெளியிட **பணக்குறைவு இல்லை.** ஸ்தோத்திரம்.

Dr. **புஷ்பராஜ்**

# பிறப்பு சான்றிதழில் தன் பிறந்த தேதி, மாதம், வருடம் திருத்தி CSI சினாட்டை ஏமாற்றிய CSI பிஷப்மார்கள்



Rt. Rev. Chrisdudass

இந்தியாவில் மிக அதிக சபைகள் கொண்டது CSI **திருநெல்வேலி** டையோசிஸ் ஆகும். **பெரும்பான்மை சபைகள்** TDTA திருநெல்வேலி டையோசிஸ் டிரஸ்ட் ஆசோசியேஷன் என்ற பெயரிலும் சுமார் 16 சபைகள் CSI **சர்ச் ஆப் சவுத் இன்டியா** என்ற பெயரில் பிஷப் **Rt. Rev. கிறிஸ்துதாஸ்** அவர்கள் தலைமையில் இயங்கிக் கொண்டு வந்தன.

பிஷப்மார்களின் ஓய்வு வயது 65 வயதிலிருந்து 67 ஆக மாற்றும் திட்டத்தில் அன்றைய **மாடரேட்டரும்,** மத்திய கேரள **CSI டையோசிஸ்** (கோட்டயம்) **பிஷப்புமான MostRev. உம்மன் K. ஜார்ஜ்** அவர்களோடு சேர்ந்து பிஷப் Rt. Rev.J.J. கிறிஸ்துதாஸ் அவர்கள் **குருக்கு வழியில்** பெரும்பான்மை மக்களின் **எதிர்ப்புக்கிடையில்** ஓய்வு வயது 67 ஆக மாற்றும் சட்டத்தை (அமென்ட்மென்ட்ஸ்) நிறைவேற்றி நடைமுறைப் படுத்திவிட்டனர்.

அதிலிருந்து பிஷப் Rt. Rev. J.J. கிறிஸ்துதாஸ் அவர்களை திருநெல்வேலியில் TDTA டையோசிஸ்சில் உள்ள எந்த சபைகளிலும் **ஆராதனையிலோ,** வேறு எந்த **விசேஷ நிகழ்ச்சிகளிலும்** கலந்துகொள்ள **சபை மக்கள்** அனுமதிக்கவில்லை.

இதன் இடையில் திருநெல்வேலி TDTA சபைகள் பிரச்சனையை **நீதிமன்றமே** தம் பொருப்பில் ஏறெடுத்து ஓய்வுபெற்ற **நீதிபதிகளைக்**கொண்டு டையோசிஸ்ஸின் **நிர்வாக பொருப்பை** நிறைவேற்றிக்கொண்டிருக்கிறது. **நீதிமன்றமே** பல **ஆடிட்டர்களை** நியமித்து டையோசிஸ்ஸில் உள்ள ஒவ்வொரு சபைகளின் கணக்குகளையும், பிரச்சனைகளையும் பழைய டையோசிஸ்ஸின் நிர்வாகத்தின் **ஊழல்களையும்** கண்டுபிடித்து **நீதிமன்றத்துக்கு சமர்பித்து தீர்ப்புகூறும் நிலை** நெருங்கும் சமயம் **கொரோனா கிருமி** தாக்கம் முடிவான விவாதங்களையும் **முடிவான தீர்ப்பையும்** பாதித்துவிட்டது.

இந்நிலையில் பிஷப் J.J. கிறிஸ்துதாஸ் அவர்கள் 2020ம் வருடம் ஓய்வுபெறுகிறார். இந்நிலையில்தான் அவர் படித்த **பள்ளிக்கூட TC நகலில்** அவர் **பிறந்த விவரம்** 1-4-1952 என்று குறிப்பிடப்பட்டிருந்ததை கண்டுபிடித்து பிஷப் அவர்கள் தன் பதவியை நீட்டிக்க **போலி சான்றிதழை** தயாரித்து CSI **சினாட்டை ஏமாற்றியிருக்கிறார்.** ஆகவே **பிஷப்** அவர்கள் மீது

**கிரிமினல்** நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று **டையோசிஸ் லே–செயலர்** மற்றும் நிர்வாக கமிட்டியினர் திருநெல்வேலி போலீஸ் கமிஷனரிடம் போலி சர்ட்டிபிகேட்டை காட்டி புகார் கொடுத்துள்ளனர்.

*குற்றசாட்டுக்கு ஆதாரமாக பிஷப் அவர்களின்*

| | | |
|---|---|---|
| School TC Copy | Date of Birth | 1-4-1952 |
| Aadhaar Card Copy | Date of Birth | 31-3-1953 |
| PAN Card Copy | Date of Birth | 1-4-1952 |
| இரண்டாவது PAN Card | Date of Birth | 31-3-1953 |

மேற்கண்ட **வருட வித்தியாசங்களை** கண்டுபடித்து போலீசுக்கும், C.S.I. சினாட்டுக்கும் சமர்பித்தனர். பிஷப் கிறிஸ்துதாஸ் அவர்கள் வகையாக மாட்டிக்கொண்டார். ஒருவருக்கு ஒரு PAN Card தான் இருக்க வேண்டும். அப்படியிருக்க பிஷப் அவர்கள் எப்படி இரண்டுவித PAN Cardயை பெற்றார்கள். அதுவும் கிரிமினல் குற்றமாகும்.

## பதவி ஆசையும் – பண ஆசையும்

திருநெல்வேலி பிஷப் Rt. Rev. J.J. கிறிஸ்துதாஸ் அவர்கள் மாதா மாதா

| | | |
|---|---|---|
| வாங்கிய சம்பளம்... | ரூ. | 1,25,000 |
| பிஷப் பங்களா பராமரிப்பு கார் போக்குவரத்து சாப்பாடு ஆகியவை சேர்த்து | ரூ. | 50,000 |
| மொத்தம்.... | ரூ. | 1,75,000 |

ஒவ்வொரு மாதமும் (ஒரு லட்சத்து எழுபத்தையாயிரம்) 1,75,000 ரூபாய் திருநெல்வேலி **CSI டையோசிஸ் சபை** மக்கள் அளித்த **காணிக்கையிலிருந்து** செலவழிக்கப்பட்டதாக கூறப்படுகிறது. சில **தினசரி** பத்திரிகை, **வார** பத்திரிகைகளும் இந்த சம்பள விகிதத்தை மிகைப்படுத்தி எழுதியுள்ளனர்.

**இவ்வளவு பெரிய தொகையையும் பதவி சுகமும் மாதா மாதம் தொடர்ந்து பெற்று அனுபவிக்கத்தான் முன் மாடரேட்டர்** Most Rev. உம்மன் K. ஜார்ஜ் அவர்களோடு கூட்டு சேர்ந்து ஓய்வு பெரும் வயதை 2 வருடம் கூட்டி சட்டம் இயற்றினார்கள். தற்போது புதிதாக பொறுப்பேற்றிருக்கும் **புதிய மாடரேட்டர்** தயவால் பிஷப் அவர்கள் தண்டிக்கப்படாமல் ஓய்வு பெற அனுமதிக்கப்பட்டார். Rt.Rev. J.J. **கிறிஸ்துதாஸ்** இப்போது ஓய்வில் இருக்கிறார்.

**பிறப்பு சான்றிதழை** திருத்த **இரண்டுவித PAN கார்டு** பெற **பிஷப் கிறிஸ்துதாஸ்** அவர்கள் செலவிட்டது எவ்வளவு தெரியுமா? சுமார் **50 லட்சங்கள்** என்று கூறப்படுகிறது.

இதோடு போதாதென்று **கல்லூரி சேர்க்கைக்கு** லஞ்சம், **ஆசிரியர் பயிற்சி** பள்ளிக்கு சேர்கைக்கு லஞ்சம், **கல்லூரி பேராசியர்** பதவிக்கு லஞ்சம் என்று **பல லட்சங்கள்** இவர் வாங்கி குவித்துள்ளதாக கூறுகிறார்கள்.

இப்படி தவறான முறையில் **வாங்கிய பணம்** – அந்த தவறுகளை **மறைக்கவும்** போலி சான்றிதழ்கள் தயாரித்தற்கும் **ஜெயிலுக்கு போகாமல்** இருக்கவும் **நீதிமன்றங்களில் வக்கீலுக்கு** கொடுக்க என்று **பல கோடிகள்** செலவழிக்க வேண்டியதானது. **தவறாக**


**சம்பாதித்த** பணம்–தன்னை காப்பாற்றிக்கொள்ளவேண்டி **அத்தனையும் செலவழிக்க வேண்டியதானதே!**

இவர் **இரவு நிம்மதியாக** தூங்கியிருக்க முடியுமா? **சந்தோஷம் தொலைந்தது. தெய்வமும்** இவரை **விட்டுவிலக,** உற்றார், **உறவினர்** டையோசிஸ்ஸில் உள்ள அனைத்து சபை மக்களின் அன்பையும் **இழந்து** ஒற்றைக்கு நிறுத்தப்பட்ட நிலையில் இப்போது இருக்கிறார். முன்னால் **பிஷப்** Rt. Rev. J.J. கிறிஸ்துதாஸ் அவர்களின் இப்போதைய சாட்சிகெட்ட நிலை இப்போது **CSI**யில் உள்ள அனைத்து **ஆயர்களுக்கும்,** அனைத்து **பிஷப்மார்களுக்கும்** CSI & CNI **மாடரேட்டர்களுக்கும்** ஒரு பாடமாக இருக்கட்டும். நீதிமன்றம் அமைத்த ஆடிட்டர்கள் பிஷப் அவர்களுடைய பழைய பண ஊழல்களையும் கண்டுபிடித்து உள்ளனர். அப்படியே பழைய கமிட்டியினரின் ஊழலும் டையோசிஸ் முறைகேடுகளும் கண்டுபிடிக்கப்பட்டு அறிக்கை தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. அவைகள் வெளியே அறிவிக்கப்பட்டால் சாட்சி மிகவும் கெட்டுப்போகும். நெல்லை திருமண்டலத்தில் புதிய கமிட்டி தேர்நதெடுக்கப்டவும், புதிய பிஷப் தெரிந்தெடுக்கப்படவும் ஜெபிப்போம்.

## மெட்ராஸ் டையோசிஸ் முன்னாள் பிஷப்
## அதே திருட்டு கிரிமினல் வேலை செய்து CBIயில் அகப்பட்டார்

**பிறப்பு சான்றிதழை திருத்தி பாஸ்போர்ட்டையும் திருத்தி டெல்லி** CBI**யால் பிடிபட்டு – விடுவிக்கப்பட்ட மெட்ராஸ்** CSI **பிஷப் (மரித்த)** Rt.Rev.**அசரியா அவர்கள் ஆகும். இவர்** பல வருடங்களுக்கு முன் **வெளிநாட்டு பயனத்தின்போது** Air Portல் பிடிபட்டார். இந்த பிஷப் அசரியாவும் **போலி சான்றிதழ்** தயாரிப்பதில் நெல்லை பிஷப்புக்கு முன்னோடியாகும்.

மெட்ராஸ் CSI டையோசிஸ் **பிஷப்பாய்** இருந்து மரித்துப்போன **பிஷப் அசரியா** அவர்களும் **பிறந்த தேதி** திருத்தி அகப்பட்டு **பாஸ்போர்ட்டில்** கள்ளதனம் காட்டினதால் மிகப்பெரிய கிரிமினல் கேஸ்ஸில் அகப்பட்டதால் பிஷப் அசரியா அவர்களை கைது செய்ய **டெல்லியிலிருந்து** CBI அதிகாரிகளும், **போலீஸ்சும்** வந்து பிஷப் அவர்களை கைது செய்தார்கள்.



**Bishop Dr. Azariah**

அப்போது **ஓய்வு பெற்ற** முன்னாள் மெட்ராஸ் CSI பிஷப் **Rt.Rev. சுந்தர் கிளார்க்** அவர்கள் மனம் இறங்கி **பிஷப் அசரியாவை** விடுவிக்க தன் **அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி** டெல்லி மந்திரி தலையிட்டு பிஷப் அசரியா தான் **திருத்தியதை** சரிபடுத்தும் வரை பிஷப் விடுவிக்கப்பட்டார். உடனே பிஷப் அசரியா அவர்கள் அவசரமாக தான் குழந்தையாக இருந்தபோது தன் பெற்றோரால் **ஞானஸ்நானம் கொடுத்த** கிராமத்துக்கு சென்று அங்குள்ள **ஆலய ஞானஸ்நான**

**புஸ்தகத்தை** தேடி எடுத்து அதையும் **போலியாக தயாரிக்கும்** கள்ளர் கூட்டம் சென்னையில் உண்டு. அவர்களுக்கு **பல லட்சங்கள் கொடுத்து** பழைய கால **பேப்பர் போல** தயாரித்து அதை **டெல்லி அதிகாரிகளிடம் சமர்பித்து** பெரும் அவமானத்திலிருந்து தப்பித்தார்.

**திருசபைகளின் தலையே** இப்படியிருந்தால் ஆயர்கள் எப்படியிருப்பார்கள்! இப்படிப் பட்டவர்களால்தான் **கொரேனா** நம் நாட்டைவிட்டு **ஒழியாமல்** இவர்கள் செய்யும் **சாட்சி கேட்டினால்** பாமர மக்களும் வேதனை அனுபவிக்கிறார்கள்.

**அறிந்திருந்தும் தவறு செய்கிறவன் – அனேக அடிகள் அடிக்கப்படுவான்.**

☐ ***சிலர் கூறியதாவது :*** பிஷப் J.J. கிறஸ்துதஸ் அவர்களை CSI சினாட் விசாரனை நடத்திய அன்று சினாட் கூட்டம் முடிந்து பிஷப் J.J. கிறிஸ்துதாஸ் அவர்கள் அவமானப்பட்டு மிகுந்த கோபத்தோடு வெளியே வந்தபோது, அவரிடம் யாரும் பேசவில்லை. வெளியில் அவருக்காய் காத்திருந்தவர்கள் சிலர் அவரிடம் பேச்சு கொடுத்தார்களாம். அப்போது இவர் கூறினாராம். CSI சினாட் என்னை **ஜெயில்** அனுப்பும் விதத்தில் பேசியிருந்தால் நான் **பத்திரிக்கை நிரூபர்களைக்** கூட்டி மற்றவர்களைப்பற்றிய **பல இரகசியங்களை** ஆதாரத்தோடு வெளியிட்டிருப்பேன். CSIயில் **எந்த பிஷப்** லஞ்ஜம் கொடுக்காமல் பிஷப் பதவிக்கு வந்து இருக்கிறார்கள்? பின்பலமாக இருந்த சில பணக்காரர்கள் மூலமாக பிஷப் பதவி பெற்ற பலரின் ஊழல்களை நான் அறிவேன்.

மேலும் இந்த நெல்லை டையோசிஸ்ஸிலும் அருகில் உள்ள மற்ற டையோசிஸில் உள்ள பிஷப்மார்களில் **ஒருவனாகிலும் யோக்கியன்கள்** இல்லை என்று தன் கோபத்தை வெளிப்படுத்தியபோது பலர் கூறியதாவது: இவர் டையோஸிஸ்சை ஏமாற்றி ஏறக்குறைய ஒரு வருடம் சம்பளம் மற்றும் பதவியை அனுபவித்திருக்கிறார். நியாயமாய் **அத்தனை மாத சம்பள பணமும்** அவரிடமிருந்து பிடித்துகொண்டு அவரை அனுப்பியிருக்க வேண்டும்! என்ன துணிகரம்? இத்தனை அவமானப்பட்டும் **இவர் திருந்தவே இல்லையே** என்று கூறிக்கொண்டார்களாம்.

ஒரு மாதம் தாமதித்திருந்தால் **பள்ளிக்கூட ஆதாரத்தையும்** திருத்திய **பிறப்பு சான்றிதழையும்** மறைத்து அதை **வெளிவராதபடி** செய்திருப்பார்.

**குறிப்பு :** வட இந்தியா காலேஜ் மாணவர்கள், யுனிவர்சிட்டியில் வேலைசெய்யும் புரொப்பசர் ஆகிய பலரின் மார்க் லிஸ்ட், படித்த டிகிரி சர்டிபிகேட்கள் யாவும் டியூப்லிகேட் ஆகும். அவைகள் போலியானவை என்று பல வருடங்கள் கழித்து கண்டுபிடித்த விவரம் தமிழ்நாட்டில் பெரிய அதிர்ச்சியை உண்டாக்கியதையும், அத்தனை பேர்களின் வேலை நஷ்டமாகி பலர் இப்போதும் ஜெயிலில் இருப்பதை அறிவேன்.

ஆனால் மற்றவர்களுக்கு புத்திசொல்லும் பிஷப்மார்கள், மாடரேட்டர்கள் ஆயர்கள் இப்படிப்பட்ட திருட்டுதனம் செய்தால் இவர்கள் ( புலபிட் ) பிரசங்க மேடை ஏறி எப்படி பிரசங்கிக்கிறார்கள் ? படிக்கும் மாணவ மாணவிகள் ஜெபத்துக்கு இவர்களுக்கு முன்னால் வந்து முட்டிபோட்டால் இவர்கள் அவர்கள் மீது கை வைத்து என்ன வார்த்தைகளை உபயோகித்து ஜெபிப்பார்கள். காப்பி அடித்து பரீட்சை எழுதாதே? பரீட்சை எழுதும்போது

திரட்டுத்தனம் செய்யாதே? பரீட்சையில் பாஸ் செய்தால் மார்க் லிஸ்ட்டை திருத்தி திருட்டுத்தனம் செய்யாதே? இப்படியெல்லாம் இவர்கள் ஆலோசனை கொடுத்து கை வைத்து ஜெபிக்க முடியுமா? இப்படிப்பட்ட கள்ள ஊழியர்கள் சபை மக்கள் தலையில் கை வைத்து ஜெபித்தால் அந்த ஆசீர்வாத ஜெபம் சாபமாகத்தானே மாறும்.

பவுல் கூறுவதை கவனியுங்கள். **ஒருவன் பேரிலும் *சீக்கிரம்* கை வைக்காதே ! உன்னை சுத்தவானாக காத்துக்கொள். மற்றவர்கள் செய்யும் பாவத்துக்கு உடன்படாதே.** 1 தீமோ 5:22

நம்மை சுத்தவானாக, பாவம் செய்யாதவனாக பார்த்துகொண்டால்தான் மற்றவர்கள் தலையில் கைவைத்து ஜெபிக்க தகுதியுண்டு.

☐ இப்படி நான் **பிஷப்மார்களைப்பற்றி**, மாடரேட்டரைப்பற்றி அவர்களின் பெரும் தவறுகளை சுட்டிக்காட்டி ஜாமக்காரனின் பணியை செய்தால் Dr. புஷ்பராஜ் **பிஷப்மார்களை குறிவைத்து** அவமானப்படுத்த இப்படி எழுதுகிறார் என்று தவறு செய்யும் பிஷப்மார்கள் மட்டும் என்னை வெறுத்து தூற்றுகிறார்கள். மேலும் டாக்டர் தான் நடத்தும் ஜாமக்காரனில் இப்படி எழுதுவதால் பிஷப்மாராகிய எங்களுக்கு பெருத்த அவமானமாக இருக்கிறது. ஒரு சிலர் தவறு செய்தால் தவறு செய்யாத பிஷப்மாருக்கு உருத்தலும் குற்ற உணர்ச்சியும் ஏன் உண்டாகுகிறது?

***ஜாமக்காரன் :*** கர்த்தாவே சகோ. பேட்ரிக் ஜோஷ்வா (FMPB) போன்றவர்களையும் ஆயிரக்கணக்கான **தியாகிகள்** தங்கள் பட்டம், பதவி, சுகம், சொத்துக்களை இழந்து அவர்களை **மிஷனரிகளாக** தந்த இந்த **நெல்லை பூமி,** அனேக **வெளிநாட்டு மிஷனரிகள்** தங்கள் வாழ்க்கையை **திருநெல்வேலிக்காக** அற்பணித்த **இந்த பூமியில்** இப்படிப்பட்ட **துனிகர ஜென்மங்களும்** சபை தலைவர்களாக்கப்பட்டார்களே! அதனால்தான் கர்த்தாவே அனைத்து ஆலயங்களையும் இப்போது பூட்டிவிட்டீரோ? கர்த்தாவே இவர்களை மன்னித்து இனி நெல்லையில் தெரிந்தெடுக்கப்படும் **புதிய பிஷப்பாவது** தெய்வ பயத்தோடு எந்த பணக்காரர் களுக்கும் அடிமையாகதவராக அமைய அருள்புரியும் ஆண்டவரே ! ஆமென்.

## திருநெல்வேலி C.S.I. மக்களுக்கு ஒரு சந்தோஷ செய்தி

இத்தனை பிரச்சனைகளுக்கு மத்தியில் திருநெல்வேலி திருமண்டலம் இரண்டாக உடைந்ததல்வா ! அது ஒன்றாக இணையப்போகிறது. TDTA என்ற டையோசிஸ் பழையபடி CSI TDTA என்று அழைக்கப்படும். பிரிந்துபோன CSI டையோசிஸ் இனி இவர்களோடு இணைந்து (CSI TDTA ) Church of South India, Tirunelveli Diocese Trust Association என்று அழைக்கப்படும்.

சென்னை CSI சினாட் மாடரேட்டர் தலைமையில் திருநெல்வேலி திருமண்டலமும் ஒன்றாக இணைந்து செயல்படும். அதற்கான பேச்சுவார்த்தைகள் முடிந்துவிட்டது. இனி சபைகள் இணைக்கப்படும் சிறப்பு விழா CSI மாடரேட்டர் தலைமையில் நடைபெறும். அதன்பின் டையோசிஸ் கமிட்டி எலக்ஷன் நடைபெற்று **புது பிஷப்** தெரிந்தெடக்கப்படுவார்.

இந்த இணைப்பு சில வருடங்களுக்கு முன்பே நடந்திருக்கும் ஆனால் முன்னால் பிஷப் J.J.கிறிஸ்துதாஸ்தான் பெரும் தடையாக இருந்தார். இப்போது இவரும் நீக்கப்பட்டுவிட்டார். நல்லதே நடக்கட்டும்

## எவன் யோக்கியன் என்ற கேள்வி சரியானதுதானே !

## CSI **கிறிஸ்தவர்களுக்கு அடுத்த அவமானச் செய்தி**

முழு CSI டையோசிஸ் ஆயர்களுக்கும் அவரவர் திருமண்டலத்துக்கும் ஒரு தலைமை ஆயர் உண்டு. அவர் பதவிக்கு **பிஷப்** என்று பெயர். **தென் இந்தியாவில்** உள்ள 24 CSI திருமண்டலத்துக்கும் தலைமையானவரை **மாடரேட்டர்** என்போம்.

அந்த **பெரும் தலை** எப்படியிருக்கிறது என்று அறியுங்கள்! இப்போது புதிதாக தெரிந்தெடுக்கப்பட்ட **மாடரேட்டர்** அவர்கள் தென் இந்தியாவில் **தெற்கு CSI திருமண்டல** பிஷப்பாக பணியாற்றும் Rt. Rev. **தர்மராஜ் ரசலம்** என்பவர் ஆகும். அவர் வாலிபராக இருக்கும்போதே ஆயர் ஆவதற்கு முன்பே அவரையும் அவர் குடும்பத்தையும் நான் அறிவேன்.



CSI Bishop & Modarator
Most Rev. Dharmaraj Rasalam

இவர் மிஷனரியாய் பணியாற்றிய **ஆந்திர மாநிலத்தில் வாராங்கல்** மாவட்டத்தில் **ஈட்டூர்** நகரம் என்ற குக்கிராமத்தில் அங்கு **முதல் மிஷனரியாக** பணியாற்றிய Rev. விக்டர் அவர்களுக்கு உதவியாளராக பயிற்சிபெற Mr. தர்மராஜ் ரசலம் அவர்களை டையோசிஸ் அனுப்பியது.

அப்போது ஒரு சிறிய இரண்டு அறை உள்ள மண் சுவர் வைக்கப்பட்ட ஒரு ஓட்டு வீட்டில் **Rev. விக்டர்** அவர்கள் **முதல் மிஷனரியாக** பணியாற்றினார். அந்த நாட்களில் சுமார் 35 வருடங்களுக்கு முன் Rev. விக்டர் அவர்கள் என்னை (Dr. புஷ்பராஜ்) மருத்துவ முகாமும், சுவிசேஷ ஊழியமும் நடத்த ஆந்திராவுக்கு அழைத்திருந்தார்.

அந்த நாட்களில் ஆதிவாசிகள் உபயோகிக்கும் பாயில் தலையனை இல்லாமல் நானும் Rev. விக்டர் அவரகளும் தரையில் படுத்து, 1 வாரம் **பல கிராமங்களுக்கு** நானும் ஆயரோடு சென்று **மருத்துவ முகாம்** நடத்தி நானும் சுவிசேஷம் அறிவித்தேன். Rev. விக்டர் அவர்கள் என் செய்தியை தெலுங்கு பாஷையில் மொழிபெயர்த்தார். ஏராளமானவர்கள் இயேசுவை ஏற்றுக்கொண்டார்கள். அதன் மூலம் அங்கு **சிறு சபை** உருவாக்கப்பட்டது. அது வளர்ந்து **பள்ளிக்கூடமும்** துவக்கப்பட்டது. இரண்டு வருடம் கழித்து அதே **ஆந்திர மாநிலத்துக்கு** சுவிசேஷ ஊழியம் செய்ய நான் மறுபடியும் அழைக்கப்பட்டேன். அப்போது எனக்கு பழக்கமானவர்தான் இப்போதுள்ள **மாடரேட்டர்** அவர்கள் ஆகும். அதன்பின் பல வருடங்கள் தெற்கு கேரளா டையோசிஸ் CSI சபை கன்வென்ஷன்களுக்கு தொடர்ந்து நான் பிரசங்கம் செய்ய சென்றபோது அவர் சாதாரண ஆயராக என் கூட்டங்களில் பங்குகொள்வார்.

(திருவனந்தபுரம்) **காரகோணம் மெடிக்கல் காலேஜ்** CSI சபைகளின் **முதல் மெடிக்கல் காலேஜ்** புதிதாக தொடங்கப்பட்டது. அப்போது **பிஷப் தர்மராஜ்** ரசலம் அவர்கள் **புது பிஷப்பாக** தெரிந் தெடுக்கப்பட்ட உடன் அந்த **மெடிக்கல் காலேஜிக்கும்** பொருப்பாக

இருந்தார். அப்போது அவர் தொடங்கிய **கோடிக் கணக்கான** பண ஊழல் **இன்று வரை தொடருகிறது.**

## மாடரேட்டர் பதவி

இப்போது பிஷப் அவர்கள் 24 CSI சபை டையோஸிஸ்களுக்கும் தலைவராக **மாடரேட்டர்** பதவி ஏற்றெடுத்தார். **பதவி உயர** ஊழலும் உயர ஆரம்பித்தது. இவர் பிஷப்பாக பணியாற்றிய காலத்தில் இவர் சம்பந்தப்பட்ட **கோடிக்கணக்கான ஊழல்கள்** வெளிவர ஆரம்பித்தது.

இப்போது மாடரேட்டரும் பிஷப்புமாக பதவியில் உள்ள Most Rev. **தர்மராஜ் ரசலம்** அவர்கள் **CBI விசாரனை வட்டத்துக்குள்** அகப்பட்டார். மொத்தம் சுமார் 18 வழக்குகள் இவர் மேல் உள்ளதாக கூறப்படுகிறது. அதில் ஒரு முக்கிய வழக்கில் **கையும்–களவுமாக** அகப்பட்டு **கிரைம் பிராஞ்ச்** Crime Branch Policeல் **பிஷப் தர்மராஜ் ரசலம்** அவர்கள்மேல் **FIR பதிவுசெய்து கைது நடவடிக்கையும்** எடுக்கப்பட்டது.

***வழக்கின் விவரம் :*** **கல்வி ஸ்தாபனங்களில்** நடந்த ஊழல்கள். Society **சொசைட்டி பெயரில்** கல்வி ஸ்தாபனங்கள் நடத்தியதில், சொசைட்டி பெயரில் நடந்த **ஸ்தாபனத்தின் வருமானத்தில்** பணம் **கையாடல் செய்ததற்கான** பலமான ஆதாரங்களை **Crime Branch Police** கண்டுபிடித்துள்ளது.

மேலும் CSI **தெற்கு கேரளா டையேசிஸ்ஸின்கீழ்** உள்ள நிறுவனங்களை நடத்துவதற்காக நிறுவப்பட்ட **SUIC-Society** பேரில் வந்த வருமானத்தையும் கையாடல் **செய்த ஊழலும்** ஆதாரத்தோடு கண்டு பிடிக்கப்பட்டது. இவை யாவற்றின் பேரிலும் போலீஸ் பிஷப் அவர்கள்மேல் **FIR பதிவு செய்யதது.** பிஷப் **தர்மராஜ் ரசலம்** அவர்களுடன் **பிஷப் செயலாளர்** திரு. **D.L. பால்சன்,** திரு.**லாரன்ஸ்** ஆகிய மூவர் பேரிலும் **FIR போடப்பட்டு** கைது நடவடிக்கை எடுக்கப்பட்டது.

1) இவர்கள் நிர்வாக கமிட்டிகள் லிஸ்டில் பொய்யாய் **ஆட்களின் பெயர்களை** இணைத்து அரசாங்கத்துக்கு காட்டி **அரசாங்கத்தை ஏமாற்றினார்கள்.**
2) 2001 முதல் 2005 வரை **மேனேஜிங் நிர்வாக கமிட்டியின் பெயர் பட்டியலை போலியாக தயாரித்து லட்சக்கணக்கான பணத்தை** அரசாங்கத்திடம் இருந்து பெற்றுள்ளனர் என்பது மிக முக்கிய **ஆதாரம்** ஆகும்.
3) அனேக **பத்திரங்களிலும் தாஸ்தாவேஜிகளில்** மற்றவர்களின் **கையெழுத்துக்களை** இவர்களே போலியாக போட்டு அனேக கள்ள பத்திரங்களை சமர்பித்துள்ளார்கள்.

குற்றம் சாட்டப்பட்ட **பிஷப்புடன்** இணைந்த மற்ற **இரண்டு நபர்களின்** செயலால் இந்திய **அரசாங்கத்துக்கு பெரும் வருமான இழப்பு** ஏற்பட்டுள்ளது என்ற **அழுத்தமான குற்றச்சாட்டை** FIRல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1) **பணம்** கையாடல் 2) போலி கையெழுத்து 3) **அரசாங்கத்துக்கு** எதிரான **சட்ட விரோதமான ஆலோசனை** போன்ற **வழக்குகள்** இவர்கள் **மேல் சுமத்தப்பட்டுள்ளது.** திருவனந்தபுரம் மியூசியம் குற்றபிரிவு **போலீஸ் விசாரனைக்கு** பிறகு இவ்வழக்கு Crime


Branch Policeக்கு மாற்றப்பட்டு Crime Branch Police D.S.P. திரு. மதுசூதனன் அவர்கள் இவ்வழக்கை விசாரித்து கைது நடவடிக்கை எடுக்கப்போகிறார்.

**சவுத் கேரளா** CSI பிஷப்பும் **CSI மாடரேட்டருமான** Most Rev. தர்மராஜ் ரசலம் அவர்கள் **கம்யூஸ்ட் கட்சியின்** ஆளாக இருப்பதால் **கேரள கம்யூனிஸ்ட்** தலைவரும், **முதல்வருமானவர், மாடரேட்டர்** அவர்களை கைது செய்யாதபடி, கிறிஸ்தவ சிறுபான்மையான சமுகத்துக்கு **அவமானம் உண்டாகாதபடி கைது நடவடிக்கையை** மட்டும் தற்காலிகமாக தடுத்து உதவியுள்ளார். நீதிமன்ற வழக்குகளில் சிபாரிசு ஏதும் செய்யவில்லை.

**நீதிமன்ற செலவு** போலீஸ் கைது செய்யாமலிருக்க செய்த **பல லட்சங்கள்** செலவை தெற்கு **கேரள டையோசிஸ் பணத்திலிருந்து கொடுக்கும்படி** பிஷப் அவர்கள் **டையோஸிஸ்ஸில்** புதிதாக தெரிந்தெடுக்கப்பட்ட **நிர்வாக கமிட்டியிடம்** கேட்டார். ஆனால் புதிய கமிட்டி அன்று நடந்த எலக்ஷனில் பிஷப் **ஆட்களை** எதிர்த்து நின்று **ஜெயித்த புதிய கமிட்டியாகும்.** செயலர் அவர்கள் மெடிக்கல் காலேஜ் **நரபியல் நிபுனர்** (நியூரோ சர்ஜன்) ஆகும். மிகவும் நியாயம் உள்ளவர். **பொருளாளர் ஆயர்** அவர்களும் **பக்தியுள்ளவர்.** ஆகவே **பிஷப் செய்த ஊழலுக்கு** போலீசுக்கும் **நீதிமன்றத்துக்கும்** டையோஸிஸ்ஸிலுள்ள பணத்தை கொடுக்கக் கூடாது என்றார்கள். உடனே பிஷப் **பெருங்கோபங் கொண்டு ஆயர்** அவர்களை **பொருளாளர்** பதவியிலிருந்து **நீக்கி உத்தரவு பிறப்பித்தார்.**

அவர் **பொருளாளர்** பதவியிலிருந்து நீக்கியது தவறு என்றும். நாங்கள் **டையோசிஸ் மக்களால் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள்,** எங்களை நீக்க **பிஷப்புக்கு அதிகாரம் இல்லை** என்று நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தார்கள். உடனே பிஷப் அவர்கள் பொருளாளர், ஆயரை பதவி நீக்கம் செய்து ஆர்டரை வாபஸ் பெற்றார். CSIயில் **எவன் யோக்கியன்** என்ற கேள்வி நியாயமக்கப்படுகிறதல்லவா?

## இந்து மத இந்திய தலைவரின் முன்மாதிரி



சுதந்திரம் பெற்றஇந்திய தேசத்தின் **இரண்டாம்** பிரதமர் திரு. **லால் பகதூர் சாஸ்திரி** அவர்கள் ஆகும். **எளிமைக்கு** உதாரணமாக வாழ்ந்து காட்டினார். தனது 62ம் வயதில் இறந்து போனார்.

அவர் இறந்தபோது அவர் **பெயரிலோ** அவர் **மனைவி** பெயரிலோ ஒரு சிறு **வீடோ,** சொந்தமாக **நிலமோ** கிடையாது. அவர் **பிரதமரானபோது** ஒரு கார் தன் சம்பளத்தில் விலைக்கு வாங்கினார். அதையும் அவர் வங்கியில் பணம் **கடனாக வாங்கித்தான்** கார் வாங்கினார். அவர் திடீரென்று இருதய அடைப்பினால் மரித்துப்போனார். ஆனால் அவர் சாகும்போது வங்கியில் செலுத்த வேண்டிய பாக்கி 5000 கடன் இருந்தது. அந்த **வங்கியின் மேல் அதிகாரி** சாஸ்திரி அவர்களின் மனைவி **லலிதா சாஸ்திரி** அவர்களிடம் **அந்த கடனை திருப்பி செலுத்த** கோரினார்கள். கடன் பாக்கி விவரம் அவர் மனைவி அறிந்த உடன்

அவருக்கு கிடைத்த **குடும்ப பென்ஷன்** பணத்திலிருந்து 5000 ரூபாயில் ஒரு பைசா மிச்சமில்லாமல் கார் வாங்கிய **கடனை அடைத்தார்கள்.** தன் **குடும்ப வசதிகளோ** தன் **சவுகரியத்துக்கோ** முக்கியத்துவம் கொடுக்காமல் வாழ்ந்தவர். இவர் இந்திய நாட்டின் **ஹோம் மினிஸ்ட்ராகவும், ரயில்வே துறை மந்திரியாகவும் பதவி வகித்தவர்.** திரு. ஜவஹர்லால் நேருவுக்கு பின் இந்தியாவின் மிகப் பெரிய பதவியான **பிரதம மந்திரியாகவும்** வாழ்ந்த ஒருவர் **மரிக்கும்போது** வங்கி **சேமிப்பு** எதுவும் இல்லாமல் **கார் வாங்கிய கடன்** 5000 ரூபாயை பாக்கி வைத்துப்போனார். அதையும் **பிரதமரின் மனைவி என்ற உரிமை** கேராமல் தன் **பென்ஷன் பணத்திலிருந்து** அந்த பணத்தை கட்டி தீர்த்து **குடும்பமே சாட்சியுடன் வாழ்ந்தது.**

## தமிழ்நாட்டு காவல்துறை மந்திரி திரு. கக்கன் அவர்களின் முன் மாதிரி

தமிழ்நாட்டு அரசியலில் திரு. காமராஜ் அவர்களின் வழியை திரு. கக்கன் அவர்கள் பின்பற்றி சாட்சியுடன் வாழ்ந்தவர். அவர் மந்திரி பதவியிலிருந்து ஓய்வு பெற்ற நிலையில் தன் சொந்த கிராமத்தில் **சிறு ஓட்டு வீட்டில்தான்** வாழ்ந்தார். மந்திரி சபையில் மிக முக்கிய பதவியான **காவல் துறை மந்திரியாக** தன் பதவி காலம் முழுவதும் **மிகத் திறமையாக** குறிப்பாக **கை சுத்தமாக** தமிழ்நாட்டின் முழு **காவல் துறையையும்** நிர்வாகம் செய்தவர். தனக்கென்று சொந்தமாக எந்த **வாகனமும்** இல்லாதவர். முன்னாள் **மந்திரி** என்று தன்னை யாருக்கும் காட்டிக்கொள்ளாமல் கடைசிவரை **டவுன் பஸ்ஸில் நின்றுகொண்டு** பயனித்தவர்.



ஒருமுறை அவர் **வியாதி படுக்கையானார்,** அரசாங்க ஆஸ்பத்திரியில் தான் முன்னால் **போலீஸ் மந்திரி** என்பதை காட்டிக்கொள்ளாமல் பொதுமக்களைப்போல வரிசையில் நின்று **அட்மிட் ஆனார்.** ஆனால் கட்டில் இல்லாததால் அவரை **தரையில் பாயில்தான் படுக்கப் வைக்கப்பட்டார்.** உறவினர் யாரும் கூட உதவிக்கு இல்லை.

அன்றைய தமிழ்நாட்டு **முதல்வராக** இருந்த **மக்கள் திலகம்** திரு. MGR அவர்களுக்கு யாரோ முன்னாள் **மந்திரி கக்கன்** அவர்கள் **வியாதி படுக்கையில்** அரசாங்க ஆஸ்பத்திரியில் படுத்திருப்பதை அறிவித்தனர். உடனே தன் காரில் ஆஸ்பத்திரிக்கு நேரில் சென்றார் தமிழக முதல்வர். தான் வருவதை யாருக்கும் அறிவிக்காமல் யாரும் எதிர்பாராத சமயத்தில் ஆஸ்பத்திரிக்கு வந்து யாரே **ஒரு நோயாளியை** முதல்வர் அவர்கள் தேடுகிறார் என்று கேள்விப்பட்ட **(DMO) ஆஸ்பத்திரி தலைமை டாக்டர் ஓடிவந்தார்.** மந்திரி **கக்கன்** அவர்களை தேடுகிறேன் என்றார். ஆஸ்பத்திரில் யாருக்கும் கக்கன் அவர்களை யார் என்று தெரியவில்லை. உடனே **கக்கன்** என்ற பெயரை **பதிவு ரிஜிஸ்டரில்** கண்டுபிடித்து எந்த வார்ட் என்பதையும் அறிந்து, **DMO** அவர்கள் **முதல்வரோடு** கட்டில் பகுதியில் தேடினார். முடிவில் தரையில் **போர்த்திக்கொள்ள போர்வைகூட இல்லாமல்** தன் துண்டை உடலை

மூடிய வண்ணம் கக்கன் அவர்கள் **சுருண்டு படுத்திருந்தார். MGR** அவர்கள் அவர் தரையில் படுத்திருக்கும் நிலையை கண்டு **கண் கலங்கினார்.** அவரை எழுப்பி உட்கார வைத்து, என்ன காரியம் செய்தீர்கள் ஐயா ! தாங்கள் **முன்னாள் மந்திரி** என்பதை ஆஸ்பத்திரியில் கூறியிருக்க கூடாதா? என்று கூறி உடனே தனி வார்டில் அவரை சேர்த்து படுக்கவைத்துவிட்டு அவரை நன்றாக கவனித்துகொள்ள கட்டளையிட்டார். அதன்பின் **பென்ஷன் தொகை** ஏற்பாடு செய்து அவர் மரிக்கும்வரை பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்துவிட்டு **தன் சொந்த** செலவில் அவர் பழைய சிறிய வீட்டை சீறாக்கி கொடுத்தார்.

நம் நாட்டின் முன்னாள் **பிரதமர்** அவர்களையும் – **தமிழ்நாட்டு** காவல் துறை **மந்திரியையும்** எதற்காக உதாரணத்துக்கு இங்கு கூறினேன் என்றால். மேலே நீங்கள் வாசித்த **பிஷப்மார்கள்,** மாடரேட்டர் **பணம் சேர்க்க** எவ்வளவு **சாட்சிகெட்ட** திருட்டு **ஏற்பாடுகளை** செய்திருநதார்கள்! அதை இவர்களுடன் ஒப்பிட்டு பார்த்தேன்.

**பேசாத விக்கிரகத்தை** வணங்கும் **இந்த அருமையான தேச பக்தர்கள் முழு இந்தியாவையும்** ஆளுகை செய்த **முன்னாள் பிரதமர்,** தமிழ்நாட்டு **காவல் துறை மந்திரி** ஆகிய இவர்கள் **பதவியில் இருந்தபோது** அவர்கள் பண ஆசை இல்லாதவர்களாய், **பண சேமிப்பு** அற்றவர்களாய் இந்தியாவுக்கு மட்டுமல்ல உலக மக்களுக்கே **சாட்சியாக வாழ்ந்ததால்** இன்றும் அவர்கள் பேசப்படுகிறார்களே!

நம்முடைய **பிஷப்மார்களின்** வாழ்கையை இவர்களோடு ஒப்பிட்டுப் பாருங்கள். **ஜீவிக்கும்** தெய்வமும், **காண்கிற தெய்வமுமான இயேசு கிறிஸ்துவின் சபைகளை** நிர்வகித்த இவர்கள் வருமானத்துக்கு அதிகமாக சேர்த்த தங்கள் **சொத்துக்களை பினாமிகள் பெயரில்** எழுதிவைத்து உள்ளார்கள். அவர்கள் தவறான வழியில் பெற்ற பணத்தைக்கொண்டு எத்தனை **வீடுகள்,** எத்தனை சொத்துக்கள் வாங்கியுள்ளனர், அவர்கள் வங்கி சேமிப்பில் சேர்த்து வைத்தது எத்தனை **கோடிகள், தங்கமாக** வாங்கிய நகைகள் எவ்வளவு? என்று சபை மக்கள் அறியாததால் சிலர் இன்னும் இவர்களுக்கு மரியாதை செய்கிறார்கள்.

**நீங்கள் பண ஆசையில்லாதவர்களாக நடந்து உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள்.** எபி. 13:5 இந்த வசனத்தின்படி இந்த தலைவர்கள் வாழ்ந்திருந்தால் இப்படி **பிறந்த தேதியை** திருத்தி **சபை மக்களையும்,** நாட்டையும் **ஏமாற்றுவார்களா?**

தேச பிதா **காந்தி** அவர்களையும், **காமராஜ் நாடார்** அவர்களின் எளிமையான வாழ்க்கையையும் பின்பற்றி அப்படியே **வாழ்ந்து காட்டிய லால்பகதூர் சாஸ்திரி,** திரு. **கக்கன் ஜி** அவர்கள் சாட்சி எப்படிப்பட்டதாயிருந்தது என்பதை ஒப்பிட்டு பருங்கள் ! **நானே தெய்வம்** என்பதற்கு **நீங்களே சாட்சிகள்** என்ற **நம் தெய்வத்தின் பெயர் வைத்து** ஏமாற்றி இவர்கள் சம்பாதித்த பணம், சொத்துக்கள், சபை மக்களாகிய நமக்கு என்ன சாட்சியை கூறுகின்றன.

**தெய்வம் தம்மை பரிகாசம் செய்ய ஒட்டார் !** ஜாக்கிறதை!

# கேள்வி? பதில்!

(கீழ்காணும் கேள்விகள் யாவும் தொலைபேசி வழியாக பல ஊர்களிலிருந்து கேட்கப்பட்டவைகளாகும்.)

**கேள்வி :** நாலுமாவடி சகோ. மோகன் C. லாசரஸ் அவர்களைப்பற்றி மிகத் தெளிவாகப் எழுதியிருக்கிறீர்கள். **கர்த்தர் என்னிடம் முகமுகமாய் தரிசனம் தந்தார்** – ஏஞ்ஜல் TV **சாது செல்வராஜ்** உடன் சேர்ந்து சகோ. **வின்சென்ட் செல்வகுமார்** எழுதிய திர்க்கதரிசனத்தைக்குறித்து **உலக மக்களுக்கு சொல்ல** நீ அவர்களுடன் **இணைந்து செயல்படு** என்று கர்த்தர் **மிகத் தெளிவாக என்னோடு பேசினார்** என்று கூறினார். இப்போது ஏன் பிரிந்தார் ? என்று இதுவரை TVயிலோ **தன் பத்திரிக்கையிலோ** வாய் திறக்கவேயில்லையே! இதை நீங்கள் ஜாமக்காரனில் விவரித்தபிறகுதான் சகோ. மோகன் C. லாசரஸ் **இயேசுவை முகமுகமாய் தரிசித்தது பொய் – கர்த்தர் மிகத்தெளிவாக பேசினார்** என்று பல தடவை இவரிடம் கூறியதும் **பொய்** என்பது தெளிவாகத் விளங்கியது.

**பதில் :** உங்களைப்போல நூற்றுக்கணக்கானவர்கள் தொலைபேசியில் பேசி நான் எழுதியதற்கு வாழ்த்து கூறினார்கள். பலர் நன்றியும் கூறினார்கள்.

அதேசமயம் **திருநெல்வேலி** மாவட்டத்திலும், **கன்னியாகுமரி** மாவட்டத்திலும் உள்ள பெரும்பாலானவர்கள் என்மேல் **மிகவும் கோபம் கொண்டார்கள்.** இந்த **கொரோனா** பிரச்சனையில் ஒரே ஒரு ஆறுதல் **சகோ. மோகன் C. லாசரஸ்** TVயில் பேசுவதால் எங்களுக்கு கிடைத்தது. அதையும் களங்கப்படுத்துகிறீர்களே! உங்களை நேசிப்பதைப் போலத்தானே அவரையும் நாங்கள் நேசிக்கிறோம் என்று கூறி என்மேல் கோபப்பட்டார்கள். **பொய்க்கும் – உண்மைக்கும்** உள்ள வித்தியாசத்தை இவ்வளவு தெளிவுபடுத்தி **விவரமாய் நான் எழுதியும்** அதை விளங்கிக்கொள்ளும் சக்தி இவர்களுக்கு இல்லாமல் போனதை நினைத்து வருந்துகிறேன். இன்னும் எப்படி இவர்களுக்கு விளங்கவைப்பது என்று எனக்கு புரியவில்லை. **பொய்** பொய்தான் அது யாராக இருந்தாலும் சரி. **இயேசுவை முகமுகமாய் தரிசிக்க முடியாது** என்று நான் கூறிய விளக்கத்திற்கு என்மேல் கோபப்பட்டவர்களின் பதில் என்ன? இயேசுவை முகமகமாய் பார்க்க முடியும் என்கிறீர்களா? சொல்லுங்கள் ? முடியும் என்றால் வேதத்தில் அதற்கு ஆதாரம் காட்ட சொல்லுங்கள். **கர்த்தர் மிகத் தெளிவாக** பேசினார் என்றால் **ஏன்**

**மூவர் அணி** ஏஞ்ஜல் TVயிலிருந்து **பிரிந்தனர்? பிரிந்தது உண்மையானால் கர்த்தர் முகமுகமாய் தரிசனம் தந்து, மிகத் தெளிவாக** மோகன் **C.** லாசரஸ் அவர்களோடு இயேசு பேசியது **ஏன் மாறியது?** தயவுசெய்து **வஞ்ஜிக்கப்படாதிருங்கள் !**

☐ சுமார் **75 ஆயிரம் ஆட்கள்** உட்கார்ந்து ஜெபிக்கும் நாலுமாவடி **திறப்பில் வாசல்** கட்டிடம் இப்போது என்ன ஆயிற்று? **பூட்டப்பட்டதே !** உங்களில் பலர் கொடுத்த காணிக்கைகள் யாவும் வெரும் **கட்டிடமாக நிற்கிறதே !**

☐ **சூப்பர் ஸ்பெஷாலிட்டி** கட்டிட பணியை கோடி கணக்கில் **காணிக்கைகளை கொடுத்தீர்களே!** என்ன ஆயிற்று? **ஆஸ்பத்திரி கட்டிடமாக** நிற்கிறதே!

மேற்கண்ட செலவுக்கு பணம் சேகரிக்க பிறந்த நாளுக்கு TVயில் ஜெபிக்க **குடும்பத்தோடு** சேர்ந்து எடுத்த Photoவை TVயில் காட்டி ஜெபித்தால் **10,000 ரூபாய் காணிக்கை** கொடுக்கவேண்டும்! என்ன ஒரு **வியாபார தந்திரம்!** கர்த்தர் அந்த **பிறந்தநாள் ஜெபத்தை** கர்த்தர் கேட்பாரா ? பிறந்த நாளுக்கு குடும்பமாக நின்று Photo எடுத்து 10,000 ரூபாயும் அனுப்பியவர்கள் ஆசீர்வதத்துக்காகவா TVக்கு போட்டோவை அனுப்பினார்கள் ? தங்கள் **குடும்ப புகைப்படம்** TV மூலம் உலகம் முழுவதும் மக்கள் பார்ப்பார்களே, அந்த **பெருமைக்காகத்தான்** 10,000 ரூபாயுடன் **புகைப்படத்தையும்** அனுப்பி ஜெபிக்க கேட்டுக்கொண்டார்கள் என்று கூறலாம் அல்லவா ! மோகன் C. லாசரஸ் இந்த **வியாபார தந்திரத்தை** அவர் குரு DGS அவர்களிடம் கற்றது ஆகும். அந்த ஜெபமும் **கேட்கப்படாது.** அந்த குடும்பத்துக்கும் **அசீர்வாதம் இல்லை.**

☐ கோடிக்கணக்கில் மிகப் பெரிய **நிலம் வாங்கி** அதில் பல லட்சம் செலவு செய்து **கட்டிடங்கள்** கட்டி செலவழித்த **ஜெப மலை** இப்போது என்ன ஆனது ? **கொரோனா தொற்று** மக்களை அந்த இடத்துக்கு **எந்த வாகனமும்** செல்லாதபடி தடுத்துவிட்டதே ! செலவழித்தது உங்கள் காணிக்கைதானே? ஒரு வேளை நீங்கள் கூறலாம் இந்த தடைகள் எல்லாம் சில மாதங்களுக்குதானே ! என்று கூறலாம். அடுத்தவர் கேட்ட அடுத்த **கேள்விக்கான** பதிலையும் வாசித்துப் பாருங்கள்.

**கேள்வி :** இந்த **கொரோனா** தாக்கம், வீட்டைவிட்டு வெளியே போக முடியாத நிலை இன்னும் எத்தனை மாதம் நீடிக்கும் ?

**பதில் :** இப்போதுள்ள நிலைமையில் யாராலும் பதில் கூற முடியாத சூழ்நிலையில்தான் இருக்கிறது. எல்லா **மாநில** முதல்வர்களும் **பிரதமர்** முதல் அமித்ஷா வரை எல்லாரும் கூறுவது என்ன ? இனி **கொரோனாவோடு சேர்ந்து வாழ** கற்றுக்கொள்ளுங்கள் என்பதாகும். கிறிஸ்தவ பாஷையில் கூறவேண்டுமானால் **பிசாசுடன்** சேர்ந்து கட்டிப்பிடித்து **குடும்பம் நடத்த பழகிக்கொள்ளுங்கள்** என்று கூறவதைப்போல் இல்லை.

☐ **அமெரிக்க** விஞ்ஞானிகள் இன்னும் இரண்டு வருடங்கள் **கொரோனா** தாக்கம் நீடிக்கும் என்கிறார்கள். **கொரியா** ஆராய்ச்சியாளர்கள் **கொரோனா** தாக்கம் இரண்டு வருடங்கள்

நீடித்தாலும் அது முற்றிலும் நம்மை விட்டு நீங்காது. தோராய கணக்குபடி **3 வருடங்கள்** இந்த கொரோனா தாக்கம் நீடிக்கும் என்கிறார்கள்.

☐ **கின்டர் கார்டன்** ஸ்கூல் முதல் **பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள்** வரை **ஆன்லைன்** வழியாக **பாடம்** சொல்லிக் கொடுக்க மொபைல் வாட்ஸ்அப் வழியாக கற்றுக்கொள்ள **அதனை புதிய படிப்பு முறைகளாக** தயாரித்துவிட்டார்கள். **பாடமும்** தொடங்கி இப்போது **பரீட்சைகளும் ஆன்லைன்** மூலமாக நடத்த ஆரம்பித்துவிட்டனர். **பள்ளி, கல்லூரி** & **ஆலயங்களின் கட்டிடங்கள்** இனி **காட்சிபொருளாக** நிற்பதை காணலாம். இப்போது புதிய அறிவிப்பு வந்துள்ளது. ஏழைகளுக்கு வாட்ஸ்அப் வாங்கமுடியாது. அதனால் பொதிகை TV சேனல் வழி பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப் போகிறார்கள் என்று செய்தகள் கூறப்படுகின்றன.

☐ **அமெரிக்காவில்** கல்லூரி **மேற்படிப்புகாகவும், IT கம்பெனிகளில்** வேலை செய்யவும், **இந்தியாவிலிருந்து** சென்ற **30 லட்சம் பேர்** டிசம்பர் மாதத்துக்குள் **அமெரிக்காவை விட்டு வெளியேறியாக வேண்டும்.** அவர்களின் படிப்பு **அமெரிக்கா யூனிவரிசிட்டி பாட திட்டங்கள் ஆன் லைனில்** இந்தியாவுக்கே அனுப்புபப்படும் என்று அறிவித்துள்ளனர். **கல்லூரி படிப்பும்,** IT **வேலையையும்** இந்தியாவிலிருந்தே **சிறப்பு கட்டணத்துடன்** படிப்பை தொடரலாம் என்றும் திட்டவட்டமாக **அமெரிக்கா அதிபர் அறிவித்துவிட்டார்.**

அடுத்த வாரம் முதல் குறிப்பிட்ட **இந்திய மாணவர்கள், வேலை செய்பவர்கள்** அனைவருக்கும் **அவசர நோட்டீஸ்** அனுப்ப ஏற்பாடு முடிந்துவிட்டன. **இதில் மாற்றமே இருக்காது. Ph. D. படிப்பையும், வைவாவையும் ஆன்லையிலேயே** படித்து **டாக்டர் பட்டமும்** ஆன்லையிலேயே **அனுப்பப்படும்** என்கிறார்கள்.

☐ இனி **இதே வழியை** அனைத்து **நாடுகளும் பின்பற்றப்போகிறது.** இது நிச்சயம் நடக்கும். தீர்க்கதரிசனமாக நான் இதை கூறவில்லை. ஒருவேளை அப்படி நடந்தால் **இந்தியாவுக்கு பல கோடி** மக்கள் **கொத்தாக வந்து சேருவார்கள்.** அதன்பின் என்ன நடக்கும்? நாட்டில் **பெரும் பஞ்ஜம்** உண்டாகும். இடம் **பற்றாகுறை** உண்டாகும். புதிய **வியாதிகளையும்** வெளிநாட்டிலிருந்து இந்தியா திரும்பும் **இவர்கள் கூடவே வியாதிகளையும் கொண்டு வருவார்கள்.**

ஆகவே **கொரோனா** தாக்கம் சில மாதங்களுக்கு மட்டுமல்ல **பல வருடங்கள்** பாதிப்பை உண்டாக்கும்.

**கேள்வி :** பிறந்த நாளில் நம் குடும்ப போட்டோ மோகன் **C.** லாசரஸ்க்கு அனுப்பினால் அவர் வாழ்த்து கூறி **TV** சேனலில் போட்டோவை வெளியிட்டு வாக்குத்தத்த வசனம் கூறுகிறார். இந்த ஊழியம் சரியானதுதானா?

**பதில் :** இதே மாதிரி கேள்வியை முன்பே ஒருவர் கேட்டார். அதற்கு பதிலும் எழுதிவிட்டேன். ஊழியத்துக்கும், **வியாபாரத்துக்கும்** உள்ள வித்தியாசம்கூட உங்களால் புரிந்துகொள்ள

முடியவில்லையா? இவரின் குரு சகோ. DGS, திருமதி **ஸ்டெல்லா தினகரன்**, மகன் பால் இவர்கள் யாவரும் TVயில் பலருடைய பிறந்த நாள் போட்டோ வெளியிட்டு வியாபாரத்தை துடங்கி நல்ல லாபத்துடன் நடத்திகொண்டிருக்கின்றனர். அதைத்தான் இவர் அப்படியே பின்பற்றுகிறார். ஆனால் ஒரு வித்தியாசம், அவர்கள் போட்டோ வெளியிட எவ்வளவு வாங்குகிறார்கள் என்று அறிவிப்பதில்லை. ஆனால் மோகன் சி. லாசரஸ் ஒரு **பிறந்தநாள் ஜெபத்துக்கு** போட்டோவுடன் TVயில் வெளியிட 10,000 ரூபாய் அனுப்பவேண்டும் என்று கூச்சமில்லாமல் வெளியிடுகிறார். போட்டோ அனுப்பியவர்களுக்கு தங்கள் போட்டோ உலகம் முழுவதும் TV மூலம் காட்டப்படுகிறது என்ற பெருமை அடைகிறார்கள். இந்த TV ஜெப வியாபாரத்தில் மோகன் C. லாசரஸ்க்கு செம்மையான வருமானம் இது. இப்படியெல்லாம் ஜெப வியாபாரத்தை TV மூலம் நடத்தும் இவர் **உண்மையான ஊழியம்** செய்கிறார் என்று யாராவது கூற முடியுமா ?

**கேள்வி :** மோகன் C. லாசரஸ் 2020 ஜனவரி மாதம் ஒரு வருட தீர்க்கதரிசனமாக **தமிழ்நாடு செழிக்கும் – மிளிரும்** என்று கர்த்தர் முகமுகமாய் தரிசனமளித்து மிகத் தெளிவாக தன்னோடு பேசினார் என்றாரே? இதுவா செழிப்பு ?

**பதில் :** சகோதரர்களே! பலர் இந்த கேள்விகளை என்னிடம் கேட்டுவிட்டீர்கள், என்னிடம் பதிலை ஏன் எதிர்பார்கிறீர்கள் ? **பொய்** தீர்க்கதரிசனம் **வருடா வருடம்** கூறினாரே அவரையே கேளுங்கள். TVயில் கேள்வி –பதில் நேருக்குநேர் நிகழ்ச்சிகள் நடத்தப்போகிறார். இந்த கேள்விகளை தைரியமாக அவரிடம் கேளுங்கள்.

கடந்த 150 நாட்களாக கெரோனா லாக் அவுட்டினால் கூலி வேலைக்குகூட போகாமல் நாய்படாத பாடுகளை அனுபவத்தீர்களே, நீங்கள் அவரை கேள்வி கேட்க உரிமை உண்டு. முன்பே பலமுறை ஜாமக்காரனில் நான் எழுதினேன். **வருடா வருடம்** திர்க்கதரிசனம் என்று கூறுகிறார்களே! **அவர்களை நம்பாதீர்கள்** என்றேன், **பிரசங்கம்** மனம் உருகும் அளவு இருந்தாலும் அவர்கள் **பொய்யர்கள்** என்று எழுதினேன். எனக்கு அவர் என்ன பெயர் வைத்தார் தெரியுமா? டாக்டருக்கு **குற்றம் சொல்லும் ஆவி** பிடித்திருக்கிறது என்றார் . இப்போதாவது நீங்கள் உண்மையை உணர்ந்து கொண்டால் சரி. இப்போது நீங்கள் தைரியமாக **பொய் சொல்லும்** பிசாசின் ஆவியை பெற்றவர்களை நோக்கி இனி அடக்குங்கள். மக்களை ஏமாற்றியது போதும் என்று அவரிடம் கூறுங்கள். அதன்பின்னும் **பொய் பேசுவதை** நிறுத்துகிறாரா என்று பார்போம். இவைகளை நான் கடுமையான வார்த்தைகளைக்கொண்டு எழுத நேர்ந்தது. இப்படி நான் வெளிப்படையாக எழுதாவிட்டால் உங்களுக்கும் **உரைக்காது** ! அவர்களுக்கும் **உரைக்காது** !

**கேள்வி** Dr. ஆனந்தஸ்ரா அவர்கள் செத்துப்போன பலரை **உயிரோடு** எழுப்பியுள்ளேன் என்று TVயில் பேசுவதை கேட்டேன் இது உண்மையாக இருக்குமா ?

**பதில் :** – நீங்கள் புதிதாக அவர் செய்தியை TVயில் கேட்கிறீர்கள் என்று நினைக்கிறேன். பல வருடங்களாகவே இப்படிப்பட்ட பொய்களை ஏராளமாக கூறி பல முறை அவர் மக்களிடம்

மாட்டிக்கொண்டார். வெல்லூர் CMCயில் செத்துப்போன நபரை **சத்துவாசேரி** என்ற இடத்தில் அவர் வீட்டுக்கு கொண்டு வந்தார்களாம். சகோ ஆனந்தஸ்ரா அவர்களை அங்கு அழைத்து சென்று செத்துப்போன பிணத்துக்காக ஜெபிக்க சொன்னார்களாம். உடனே அவர் ஜெபித்த உடன் அவர் பிழைத்து இப்போதும் உயிரோடு இருக்கிறார் என்று மேடையில் கூறினாராம். அன்று வெல்லூரில் இவர் நடத்திய கூட்டத்துக்கு தலைமை தாங்கிய பிஷப் Rt. Rev. டிரினிட்டி பாஸ்கர் அவர்கள் இதற்கு சாட்சி என்றார். இவ்விவரம் அறிந்தவுடன் வெல்லூரில் என் நண்பர்களிடம் விசாரிக்க சொன்னேன். அதே சத்துவாசாரியில் குடியிருக்கும் என் வாசகர் அப்படி ஒரு சம்பவமே நடக்கவில்லை.

அப்படி செத்துப்போன ஒருநபர் உயிரோடு எழுந்திருந்தால் நாங்கள் CMC ஆஸ்பத்திரிக்கு அழைத்துச்சென்று அவரை டாக்டர்கள் மூலம் பரிசோதித்து அந்த அறபுத செய்தியை எல்லா செய்தி தாள்களிலும் வெளியிட்டிருப்போமே ! பிஷப்பே சாட்சி என்று கூறியதால் பிஷப்பை விசாரித்தால் அவருக்கு பெருங்கோபம் உண்டானது. அந்த ஃபிராட் அப்படியா கூறினான் என்று மிகவும் கோபப்பட்டார் என்றார்கள். எல்லாரும் அந்த சம்பவத்தை குறித்து ஆனந்த ஸ்ரா அவர்களுக்கு எழுதி விசாரித்தார்கள். அவர் பதில் எதுவும் கூறவில்லை என்றார்கள். அவைகளை நான் ஜாமக்காரனில் அதை வெளியிட்டேனே ! இப்போது மறுபடியும் அப்படிப்பட்ட பொய்களை TV செய்தியில் சாட்சியாக கூற ஆரம்பித்துவிட்டார். ஜூலை மாதம் **நம்பிக்கை** TV சேனலில் ஒருவர் தன குடும்பத்தில் உறவினர் ஒருவர் செத்துவிட்டார் என்று சகோ. ஆனந்தஸ்ரா அவரிகளிடம் கூறினாராம், அதற்கு அவர் **செத்துப்போனவர் காதில்** போனை வைக்க சொல்லி தான் திருச்சியிலிருந்தபடியே ஜெபித்தேன். பிணத்துக்கு ஜெபம் கேட்டது. உடனே **செத்துப்போனவர் உயிரோடு எழுந்துவிட்டார்** என்று கூறியது **ஜமுகாளத்தில வடிகட்டின பொய்களாகும். நம்பிக்கை** TV சேனல் இன்றைய **கிறிஸ்தவ TV சேனல்களில்** சிறந்தவை ஆகும். ஆனால் இப்படிப்பட்ட **குப்பை நிகழ்ச்சிகளையும்** பணத்துக்காக வெளியிடுவதினால் அந்த நம்பிக்கை சேனலின் தரம் குறைந்து விடுமே ! சகோ **ஸ்டீபன்** போன்றவர்களும் இது மாதிரி **பொய் சாட்சிகளை** அள்ளிவிடுகிறார்கள் ! Sponsers பணம் கொடுத்தால்தான் நம்பிக்கை TV சேனலை தொடர்ந்து நடத்த முடியும் என்ற நிலையில் அவர்கள் இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்.

Dr. ஆனந்த ஸ்ராவின் **மகள் இரட்சிப்பின் அனுபவம்** பெற்ற நல்ல பெண் ஆகும். அவரும் அவருடைய **மருமகனும்** எப்படி **இப்படிப்பட்ட பொய் சாட்சிகளை** தன் தகப்பனார் துனிந்து கூறுவதை இவர்கள் தடுக்க முடியாமல் இருக்கிறார்கள் ! என்று விளங்கவில்லை !

**கிறிஸ்தவ** TVசேனல்களை பார்ப்பவர்கள் பார்க்கும் நிகழ்ச்சிகள் சரியில்லை என்றால் உடனே TV சேனலை மாற்றி வேறு சேனல்களை பாருங்கள். அதிலும் இப்படப்பட்ட குப்பைகள் வரும். பார்க்கும் நீங்கள்தான் ஜாக்கிறதையாக இருக்க வேண்டும்.

**பிசாசு** உபயோகிக்கும் ஆயதங்களில் **TV சேனலும் ஒன்றாகும்.** அதில் நல்ல கிறிஸ்தவ சேனல்களை நடத்துபவர்களே அறியாமல் சேனலுக்குள் இப்படிப்பட்ட பிசாசு புகுந்து விடுகிறான்.

☐ அதே **நம்பிக்கை** TVசேனலில் **கல்வாரி டெம்பிள்** என்ற சபையின் பாஸ்டர் Dr. சதிஷ் அவர்களின் செய்தி, **பாஸ்டர் ஜெயபால் பவுண்டேஷன்** என்ற சேனல், **பாஸ்டர் செல்லதுரை** போன்ற இன்னும் நல்ல செய்தியாளர்களின் செய்திகளும் வருகிறது, அவைகளை கேளுங்கள். சகோ. ஸ்டீபன், Dr. ஆனந்த ஸ்ரா, பாஸ்டர் சானாபதி போன்ற இவர்களெல்லாம் தங்கள் பிரசங்கத்தில் நிறைய சாட்சிகளை மிகைப்படுத்தியும், பொய்யான சாட்சிகளையும் கூறுபவர்கள். இப்படிப்பட்ட TV நிகழ்ச்சிகளை நீங்கள் பாராமல் இருப்பது உங்களுக்கு நல்லது.

**கேள்வி :** சகோ. மோகன் C. லாசரஸ் அவர்கள் நீண்ட நாட்கள் உபவாசம் செய்து ஜெபித்து பல ஆசீர்வாதங்களை பெற்றேன் என்கிறார். **நீண்ட நாட்கள்** என்றால் **எவ்வளவு நாட்கள் உபவாசம் செய்யலாம் ?**

**பதில் :-** 40 நாட்கள், 30 நாட்கள், 7 நாட்கள் போன்ற உபவாசங்கள் என்பது **பழைய ஏற்பாட்டு** சடங்குகளாகும். **புதிய ஏற்பாட்டு சபை விசுவாசிகளுக்கு** அப்படிப்பட்ட உபவாசங்கள் **கொடுக்கப்படவில்லை.** பழைய ஏற்பாட்டில் **நீண்ட உபவாசங்கள்** எழுதப்பட்டுள்ளன. அவைகள் சடங்குகள் ஆகும். புதிய ஏற்பாட்டில் லூக்கா. 18:10ல் இரண்டு பேர் தேவாலயத்துக்கு சென்றார்கள் ஒருவன் பரிசேயன், மற்றவன் **ஆயக்காரன்** (வரி வசூலிப்பவன்) பரிசேயன் ஜெபிக்கும்போது கூறியதை கவனியுங்கள் 12ம் வசனத்தில்தான் வாரத்தில் **இரண்டு தரம்** உபவாசிக்கிறேன். ஆனால் **ஆயக்காரன்** அப்படியல்ல என்று ஜெபத்தில் கூறுவதாக பார்க்கிறோம். இரண்டு நாள் உபவாசம் என்பது நியாயபிரமானமான காலம் ஆகும். ஆகவே **நீண்ட நாட்கள்** உபவாசம் நமக்கு பிரயோஜனமில்லை. அது **சரீரத்தை கெடுக்கும். சுவர்** இருந்தால்தான் **சித்திரம்** வரைய முடியும். 30 நாட்கள் 15 நாட்கள் என்று **சாப்பிடாமல் இருந்து** உடல் பலவீனப்பட்டு போனால், எப்படி மற்ற ஆத்துமாக்களுக்காக **நீண்ட நேரம் ஜெபிக்க முடியும்.** கர்த்தருக்கு **நீங்கள் வேண்டும்** - உங்கள் **சரீரம் வேண்டும்** கர்த்தர் ஒவ்வொருவரையும் ஒவ்வொரு திட்டத்தோடு பிறக்க வைத்துள்ளார்.

இப்படி நான் எழுதும் போது சிலர் கூறலாம். இயேசு கிறிஸ்து 40 நாட்கள் வனாந்திரத்தில் **உபவாசம்** எடுத்தாரே எனலாம். **அவராக அந்த 40 நாள் உபவாசத்தை** எடுக்க **வனாந்திரம் போகவில்லை.**

**ஆவியானவர்** அவரை உபவாசம் செய்வதற்கு **வனாந்திற்கு அழைத்து** சென்றதாகத்தான் வேதம் கூறுகிறது. அது **நியாயப்பிரமான காலத்தில்** நடந்த நிகழ்ச்சி என்பதையும் நீங்கள் கவனிக்க வேண்டும். **நியாய பிரமான** காலத்தின் **சடங்குகளில் ஒன்று 40 நாட்கள் உபவாசம்.** இங்கு ஆவியானவர் இயேசுவை அழைத்துப்போக முக்கிய காரணம் **பிசாசை அவமானப்படுத்தவும்,** பிசாசை **ஜெயிக்கவும்** அழைத்துப்போனார். இந்த உலகில் ஒவ்வொரு மனிதனுக்கும் உண்டாகும் மூன்று வித சோதனைகள். அந்த சோதனைகளை இயேசு எப்படி வனாந்திரத்தில் ஜெயித்தார் என்பதுதான் இந்த சம்பவம் மூலம் அறிகிறோம்.

1) மண் ஆசை 2) பெண் ஆசை 3) பொன் ஆசை

இந்த மூன்றில் நமக்கு நேரிடுகிற சோதனைகள் எல்லாம் அடங்கும். **சரீரத்தை** நாம் எப்படி அடக்கி **ஆள்வது** என்பது முதல் சோதனை – அதில் மனிதன் ஆகாரத்தினால் மட்டுமல்ல, **வசனத்தினாலும்** ஜீவிக்க முடியும் என்பதை நிரூபித்தார். **இரண்டாம்** சோதனை – உலக ஆசை – சுற்றிலும் பெரிய கட்டிடங்கள், ஊர்கள் இவைகளை காட்டி **உலக ஆசையை** உண்டாக்குகிறான். அடுத்த சோதனையில் இயேசு **தேவகுமாரன்** என்று அறிந்ததால் **கீழே குதிக்கும்படியும்** அதன்மூலம் **தூதர்கள்** அவரை கப்பாற்றிவிடுவார்கள் என்று கூறினால் **மறைமுகமாக** தன் சொல்லுக்கு **இயேசுவும் கீழ்படிந்தார்** என்று பெருமைகொள்ள நினைத்தான். இப்போதுதான் இயேசு தான் **ஆண்டவர்** என்பதை கூறி உணர்த்தி **பிசாசை துறத்திவிட்டார்.**

**இயேசு** வாழ்ந்த காலம் **நியாயபிரமான காலம்,**. ஆகவே 40 **நாள் உபவாச நாட்களை** அனுஷ்டிப்பதை ஆசாரியர்களும் மற்றவர்களும் அறியவும், **பிசாசை** வசனத்தால் **ஜெயிப்பதை** தன்னை பின்பற்றும் **மக்கள் அறியவும்** 40 நாள் உபவாச நாட்களை அனுஷ்டித்தார். அதன் பிறகு அவர் சிலுவையில் அறையப்படும் வரை பழைய ஏற்பாட்டு **சடங்குகளை** பின்பற்றாமல் **புதிய உடன்படிக்கைக்குள்** கடைசி **திருவிருந்தின்** மூலம் **நினைவு கூ ற கட்டளை கொடுக்கிறார்.**

இயேசு சிலுவையில இரத்தம் சிந்தி மரித்த உடனேயே **நியாய பிரமான** காலமும் **முடிவு** பெற்றது. **புதிய உடன்படிக்கை, புதிய திருச்சபை அந்த சபைக்கான புதிய புதிய** உபதேசம் யாவும் உபதேசிக்கப்பட்டு செயல்படுத்தப்படுகிறது.

அப்படியானால் **புதிய ஏற்பாட்டு** சபைக்கு **உபவாசம் கிடையாதா?** உண்டு ! **நிச்சயமாக உண்டு,** சீஷர்கள் உபவாசம் எடுத்தார்கள், புதிய ஏற்பாட்டு **சபை விசுவாசிகள்** யாவரும் உபவாசித்தனர். எப்படிப்பட்ட உபவாச ஜெபம் சரியானது அதன் ஒழுங்குமுறை என்ன என்பதை பிறகு தனியாக எழுதுகிறேன்.

**கேள்வி :** சகோ. மோகன் C. லாசரஸ் அவர்கள் கொரோனா அழிய 40 நாள் உபவாச ஜெபம் சத்தியம் TV வழியாக நடத்தும்போதுதான் அவர் அன்னிய பாஷையில் பேசியதை கவனித்தேன். உடனே நீங்கள் ஒரு முறை பிரசங்கத்தில் அறிவித்தபடி வீடியோ கேமராவில் அவர் அன்னிய பாஷையை அப்படியே பதிவு செய்தேன். அதிக நேரம் அவர் அன்னிய பாஷையில் பேசவில்லை. ஒரு நிமிடம் அன்னிய பாயைில் பேசிவிட்டு மற்றவர்கள் ஆங்காங்கு இருந்தபடியே அன்னிய பாஷையில் சத்தமாக ஜெபித்துக்கொண்டேயிருங்கள் என்றார். அவர் பேசிய அன்னிய பாஷையை 13 நாட்கள் தொடர்ந்து வீடியோவில் பதிவு செய்து நானும் என் மனைவியும் அந்த 13 நாள் அன்னிய பாஷையை தொடர்ச்சியாக போட்டுக் கேட்டோம். சொன்னதையேதான் திரும்ப திரும்ப கூறினார். ஒரு புதிய வார்த்தை எதுவும் சேர்க்கவில்லை. எனக்கு தெளிவு உண்டானது. ஆனால் என் மனைவி அவர்மேல் உள்ள அன்பினால் அந்த பாஷை பொய்யானது என்பதை நம்ப மறுக்கிறார். அதன்பின் நான் என் மனைவியை கட்டாயப்படுத்தவில்லை. உங்கள் பத்திரிகை ஜாமக்காரன் மட்டும் நாங்கள் வாசிக்காதிருந்தால் இந்த அளவு நாங்கள் தெளிவு பெற்றிருக்க முடியாது. கர்த்தர் உங்களுக்கு நீடித்த ஆயுளை

தந்து பத்திரிகை ஊழியம் மூலமாக எங்களைப்போன்றவர்களுக்கு விழிப்புணர்வை கர்த்தர் உண்டாக்குவாராக.

**பதில் :–** உங்கள் நீண்ட கேள்வியை நான் சுருக்கியும் என்னால் குறைக்க முடியவில்லை. இப்படிப்பட்ட உங்களுக்காக நான் கர்த்தரை துதிக்கிறேன். என்னை கர்த்தர் பயன்படுத்தியதற்காக துதிக்கிறேன். இவரைவிட நல்ல அனுபவம் உள்ள (சென்னை சின்னமலை AOG சபை) தலைமை பாஸ்டர் D. மோகன் அவர்கள் ஞாயிறு TVயில் ஆராதனை நடத்தியதை நானும் என் மனைவியும் பார்த்தோம். அப்போது அவர் அன்னிய பாஷையில் தைரியமாக சப்தம் உயர்த்தி (வீட்டில் இருந்தாலும்) ஜெபித்துகொண்டிருங்கள். நீங்கள் பேசும் அன்னிய பாஷை சாதாரனமானது அல்ல, அது **பரலோக பாஷை** அதை இந்த பூலோகத்திலே நீங்கள் பயிற்சி எடுத்தால் பரலோகத்தில் வாழ உங்களுக்கு எளிதாக இருக்கும் என்றார்.

இந்த **பாஸ்டர்கள்** இவ்வளவு **வேத அறிவு சூன்யமாக** இருப்பார்கள் என்று நினைக்கவேயில்லை?

உலகத்திலேயே வேத புஸ்தகம் வழியாக நாம் அறிந்த **பரலோக பாஷை** ஒன்றே ஒன்றுதான். அது **அல்லேலுயா** என்பதாகும். உலகத்தின் எத்தனை பாஷை இருந்தாலும் எல்லா பாஷையிலும் மொழி பெயர்ப்பு இல்லாமல் எழுதப்பட்ட ஒரே வார்த்தை அல்லேலுயா என்ற வார்த்தை உபயோகிப்பதை யோவான் பதிவு செய்துள்ளார். மேலும் பரலோகத்தில் என்ன பாஷை பேசுகிறார்கள் என்பது இதுவரை யாருக்கும் வெளிப்படுத்தப்படாத இரகசியம். நான் தூதர் பாஷையில் பேசினாலும் அன்பு எனக்கில்லாவிட்டால் நான் ஒன்றுமில்லை என்று எந்த பாஷைக்கும் முக்கியத்துவம் கொடுக்காது அன்புக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பதற்கு உதாரணமாக சொல்லப்பட்டதாகும். எந்த தூதன் பூலோகத்துக்கு வந்தாலும் யாரை சந்தித்தாலும் அவரவர்கள் பாஷையில் தான் பேசுகிறார்கள் என்பதை வேதம் வாசித்த எல்லாருக்கும் தெரியும். இந்த பெந்தேகோஸ்தே பாஸ்டருக்கு குறிப்பாக பாஸ்டர் D. மோகன் அவர்களுக்கு தெரியவில்லையே! ஆதியாகமத்தில் தங்கள் பெயர் விளங்க வானம்வரை உயர்ந்த கோபுரம் பணிவோம் என்று அன்றைய மக்கள் முட்டாள்தனமாக முயற்சிசெய்தபோது கர்த்தர் தம் தூதர்களோடு நாம் கீழே இறங்கி இவர்கள் கட்டிய கோபுரத்தை பார்ப்போம் என்று கூறியதாக எபிரேய பாஷையில் எழுதப்பட்டுள்ளது. அவர்கள் தூதர்கள் மொழியில் பேசினார்கள் என்று எழுதப்படவில்லையே !

அப்படியிருக்கும்போது அன்னிய பாஷை பரலோக பாஷை என்றால் எப்படி ? எந்த வசனத்தின் அடிப்படையில் இப்படிப்பட்ட கள்ள உபதேசத்தை மக்களுக்கு முன் விதைக்கிறார்கள் என்று விளங்கவில்லை என்றாலும மிகத் துணிகரம். ஆவியானவரை இவர்கள் அவமானப்படுத்துகிறார்கள். இவர்களால் TVயில் அன்னிய பாஷை பேசி ஆவியானவர் மற்ற மத மக்களுக்குமுன் தூஷிக்கப்படுகிறார். இவர்கள் கதி என்ன ஆகுமோ தெரியவில்லை. நல்ல வேளை நீங்கள் வீடியோ எடுத்து தெளிவுபடுத்தி உங்களை காத்துக்கொண்டீர்கள். அன்னிய பாஷை என்று உளரிக் கொண்டிருக்கும் உங்கள் சபையில் உங்களுக்கு நெருக்கமான விசுவாசிகளுக்கு மட்டும் அதை போட்டுக் காட்டுங்கள். இந்த பதில் போலி பாஷைகளை பேசுகிற எல்லாருக்கும் ஒரு தெளிவை உண்டாக்கட்டும்.

# 2020ம் வருடம் நான் கடைசியாக பேசிய கன்வென்ஷன் கூட்டம்

2020ம் வருடம் மார்ச் மாதம் 22ம் தேதி கொரேனா ஊரடங்கு தொடங்கிய முதல் நாள் காலை ஆராதனையும் அன்று மாலை 6-00 மணிக்கு கண்வென்ஷன் நடத்தப்பட்டது. அதுதான் என் கடைசி நாள் கூட்டங்கள் ஆகும்.

## CSI கோயமுத்தூர் டையோசிஸ் – கோயமுத்தூர் CSI Church of South India

## கன்வென்ஷன் கூட்டங்கள்




**கொரோனா வைரஸ்** தாக்கத்தால் உலகம் கண்டிராத அளவு உலகம் அனைத்திலும் மக்கள் கொத்தது கொத்தாக கொரோனா வியாதியால் செத்து விழத்தொடங்கியவுடன், உலகமே செய்வதறியாது திகைத்து கொண்டிருந்த வேளையில் இந்தியாவிலும் சாவு எண்ணிக்கை கூடிவந்த போது வியாதிக்கு மருந்து கண்டுபிடிக்காத சூழ்நிலையில் **உலகம் முழுவதும் ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்டது.** அதை பின்பற்றி இந்தியாவிலும் குறிப்பாக தமிழ்நாட்டிலும் முதல் ஊரடங்கு 2020 மார்ச் 22ம் தேதி ஞாயிறு காலை 7-00 மணிமுதல் ஊரடங்கும் 144 சட்டமும் அறிவிக்கப்பட்டபோது **கோயமுத்தூர்** CSI **கிறிஸ்துநாதர் ஆலய** வளாகத்தில் வைத்து என் கூட்டங்கள் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருந்தது.

**சனிக்கிழமை** இரவு கூட்டம் முடியும்போதுதான் **ஊரடங்கு செய்தி** வந்தது. ஆலயங்கள் மூடப்படவேண்டும், ஆராதனை நடத்தக்கூடாது என்று அறிவிப்பு வந்து மக்கள் திகைத்து கொண்டிருக்கும் நேரம், கோயமுத்தூரிலும் மற்ற ஊர்களில் **CSI சபைகளில்** நடந்துகொண்டிருந்த கூட்டங்கள் **சனிக்கிழமையுடன்** நிறுத்தப்பட்டு, **பிரசங்கிமார்களை** சனிக்கிழமை இரவே அவரவர் ஊர்களுக்கு திருப்பி அனுப்பப்பட்டுவிட்டார்கள் என்ற செய்தி எங்களுக்கும் வந்தது.

ஆனால் நான் பிரசங்கித்த **கோயமுத்தூர்** திருச்சி ரோட்டில் அமைந்த CSI **கிறிஸ்துநாதர் சபை** நிர்வாகிகள் அதிக தைரியம் கொண்டவர்கள். ஊரடங்கு நாளான ஞாயிறு

காலை **இரண்டு ஆராதனைகளையும்** ஒரே ஆராதனையாக்கி அந்த ஆராதனையை நடத்தி முடித்து மாலை கன்னெ்ஷனும் வழக்கம்போல் 6-30 மணிக்கு நடத்தப்படும் என்றும் அறிவித்துவிட்டனர்.

**பஸ்** ஓடவில்லை, **டாக்ஸி, ஆட்டோ** எதுவும் ஓடாத நேரத்தில் மக்கள் மாலை கூட்டத்துக்கு எப்படி வந்து சேருவார்கள் என்று சபை நிர்வாகிகளிடம் நான் கேட்டேன். எங்கள் சபை மக்கள் எப்படியும் வந்துவிடுவார்கள் என்று வெகு நம்பிக்கையுடன் எனக்கு தெரிவித்தார்கள். அவர்கள் கூறியபடி வழக்கம்போல் ஒரு காரில் இரண்டு குடும்பங்கள், மோட்டார் பைக் **வாகனங்களில்** ஒரு குடும்பத்தையே உட்கார வைத்து **மக்கள் திரளாக** கூட்ட மண்டபத்துக்கு வந்து நிறைந்துவிட்டனர். வளாகம் நிறம்பியது. நானும் பிரசங்கம் செய்து முடித்து கூட்டங்கள் அறிவித்தபடி வெற்றிகரமாக ஆசீர்வாத்தத்தோடு நிறைவடைந்தது.

இனி நான் **வீடு திரும்ப** பதிவு செய்த ரயில்கள் எல்லாம் கேன்சல் செய்யப்பட்ட விபரம் அறிந்தேன். எந்த **வாகனமும் சாலையில்** ஓடவில்லை. சபை ஆயர் நிர்வாகிகள் யாவரும் இணைந்து என்னை **விசேஷ காரில்** சேலம் திரும்பி செல்ல ஏற்பாடு செய்து பத்திரமாக என் வீடு வரை **பாதுகாப்பாக கொண்டுவந்து சேர்த்தார்கள்**. வழியில் ஈரோடு மாவட்ட தலைநகர் மூடப்பட்டுகொண்டிருந்தது. ஆனால் யாரும் எங்கள் காரை தடுத்து நிறுத்தவில்லை. சபை தலைமை ஆயர் Rev.**குணசீலன்** அவர்களும் ஆலய **நிர்வாகக்குழு தலைவர்களும்** மிக சிறப்பாக கூட்ட ஏற்பாடுகளை செய்து கூட்டம் அறிவித்தபடி **முழுமையடைய செய்தார்கள்.** கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக.

ஊரடங்கு அன்று காலை **கொரோனா** சூழ்நிலையைப் பற்றி பிரசங்கத்தில் நான் விளக்கி அன்று இரவும் கடைசி நாளின் **செய்தியும்** மக்களுக்கு அறிவித்தேன். கூட்டங்கள் யாவும் பிரயோஜனமாக அமைந்தது. அங்கு பிரசங்கித்த செய்திகளை U-tubeல் **Christ Church Coimbatore** என்ற பெயரில் அந்த செய்திகள் பதிவு செய்யப்பட்டு பலர் அதை இன்றளவும் U-tubeல் பார்த்து எனக்கு அறிவிக்கிறார்கள். அதன்பிறகு 2020 ஆகஸ்ட் மாதம் வரை சுமார் 150 நாட்கள் நான் வீட்டைவிட்டு வெளியே செல்லாமல் **வீட்டு சிறையில்** அகப்பட்டதுபோல் வீட்டிலேயே அமர்ந்து வழக்கமான என் **எழுத்து ஊழியங்கள் தமிழ்** & **மலையாளம்** பாஷைகளில் **பத்திரிகை செய்திகளை** தயாரித்தும் **கடிதங்கள் email** வழியாக வந்த கடிதங்களுக்கு பதில் **எழுதியும் தொலைபேசி வழியாக** மக்களுக்கு **ஆலோசனை கூறி ஜெபித்து என் ஊழியத்தை தொடருகிறேன்.** கர்த்தருக்கு தெரியாமல் நம் வாழ்கையில் எதுவும் நடப்பதில்லை. இனி ஆலயங்கள் வழக்கப்படி சுதந்திரமாக நடக்குமா ? கன்வென்ஷன் என்ற ஏறபாடுகள் தொடருமா ? என்ற பெரும் கேள்வி குறியாக இருக்கிறது. ஜெபிப்போம்.

**உலகம் உண்டானது முதல் இதுவரைக்கும் சம்பவித்திராததும்,**
**இனிமேலும் சம்பவிப்பாததுமான மிகுந்த உபத்திரவம் உண்டாகும்.** மத் . 2:21

நம் தெய்வம் இயேசு கிறிஸ்து 2020 வருடங்களுக்கு முன்பே நம்மை எச்சரித்து அறிவித்துவிட்டார்.

கர்த்தரை நம்புகிறவர்களுக்கும், கர்த்தரின் வசனத்தின்படி ஜீவிக்கிறவர்களுக்கும் காகத்தைக்கொண்டும், வீட்டில் எண்ணெய்யும், மாவும் குறையாதபடியும் வழிநடத்துகிறவர்தன் நம் தேவன். நம்மை சுற்றி சாப்பாட்டுக்காக அழுவார்கள். எங்கும் பஞ்சம், வியாதிகள் வியாபித்திருக்கும். ஆனால் கர்த்தரை நம்புகிறவர்களுக்கோ ஒரு நன்மையும் குறைவுபடாது. கர்த்தரை ருசித்து பாருங்கள். நம் தேவன் உயிரோடிருக்கிறார். நோவாவின் நாட்களில் உலகம் முழுவதும் தண்ணீரில் அழிக்கப்பட்டது. ஆனால் நோவாவின் குடும்பத்தையோ பேழையில் சுமார் ஒரு வருடம் லாக்அவுட்டில் வைக்கப்பட்டார்கள். அந்த ஒரு வருடம் உலகத்தை கானாது உள்ளேயே இருந்தும், ஒரு தொற்றும் வியாதியும் உள்ளே நோவாவின் குடும்பத்தை அனுகாமல் பார்த்துக்கொண்டார். அந்த ஒரு வருட லாக்கவுட்டிலும் சாப்பாட்டுக்கு குறைவு இல்லாமல் கர்த்தர் மக்களை பாதுகாத்தார். லாக்கவுட் முடிவுக்கு வந்து பேழையைவிட்டு வெளியே வந்தபின்னும் கர்த்தர் அவர்களை ஒரு குறையும் இல்லாமல் பார்த்துக்கொண்டார். அதே தெய்வம்தான் இப்போது ஜீவிக்கிறார். உலகம் முடியும் வரை கர்த்தரை நம்புகிறவர்களை காப்பாற்ற எப்போதும் அவர் எப்போதும் உயிரோடிருக்கிறார். எபி. 7:25.

## எச்சரிக்கை ! எச்சரிக்கை !!

### அந்தி கிறிஸ்துவின் ஆளுகைக்கு தயாராகிறது இஸ்ரேல்

1948ம் வருஷம் இஸ்ரேல் என்ற தேசம் அறிவிக்கப்பட்டது. இஸ்ரேல் தனி நாடாக அறிவிக்கப்பட்ட அன்று அதே நாளில் முதலாவதாக **பிறந்த குழந்தைதான்** இப்போது **இஸ்ரேல் பிரதமராக** இருக்கும் **பெஞ்ஜமின் எந்தன்யாகு** என்பராகும்.

இவர் திடீரென்று பத்திரிகையாளர்களை அழைத்து இஸ்ரேலில் இருக்கும் சகல சிறு குழந்தைகளுக்கும், சிறு பிள்ளைகளுக்கும் **மைக்ரோ சிப்** பொருத்தப்பட வேண்டும். அது **கொரோனா கிருமியிலிருந்து** அவர்களை காப்பாற்றும் என்றார். இதற்கு இஸ்ரேலில் வாழும் ஒட்டுமொத்த மக்களும் தங்கள் எதிர்பை தெரிவித்தார்கள். **ஆர்த்தடாக்ஸ்** யூதர்களும் **மேசியானிக்ஸ்** யூதர்களும் மிகக் கடுமையாக தங்கள் எதிர்பை தெரிவித்தார்கள். இதற்கு பிரதமர் பயன்படுத்திய வாக்கு **ஸ்வவ்** என்பதாகும். இதற்கு சிப் என்று அர்த்தம். எதிர்ப்புகள் வலுத்தபின் பிரதமர் **ஸ்வவ்** என்ற வார்த்தைக்கு பதில் **ஹைஷா** என்ற வார்த்தையை பயன்படுத்தியுள்ளார். இது **கார்களில் பயன்படுத்தும் சென்சார்க்கு** சொல்லப்பட்டிருக்கும் வார்த்தையாகும்.

இப்போது இந்த **ஹைஷா** – சென்சார் சிப்பை **சிறு பிள்ளைகள்** முதல் **முதியவர்** வரை **இஸ்ரேல் தேச மக்கள் யாவரும்** கண்டிப்பாக பொருத்தியாகவேண்டும் என்று **அதிகாரபூர்வமாக அறிவித்து** செயல்படுத்த தொடங்கிவிட்டார்.

**அந்தி கிறிஸ்துவின்** அதிகாரத்துக்குள் **நம் எல்லாரையும்** நம் தேச தலைவர்கள் ஒப்படைக்க **ஒப்பந்தம் செய்யப்போகிறார்கள்.** இயேசுவின் இரண்டாம் வருகைக்கு மிக சமீபத்தில் நெருங்கிவிட்டது.

# விளம்பரம் இல்லாத மனித நேயம்



2020 May மாத ஜாமக்காரனில் 26ம் பக்கம் **விளம்பரம் இல்லாத மனித நேயம்** என்ற தலைப்பில் **சகோ. லிவிங்ஸ்டன் நல்ல தம்பி** (Charted Accountant) அவர்கள் சாலை ஓரம் வேலை இழந்த வட இந்திய வாலிபர்கள் குடும்பங்களை கண்டார். **கொரோனா தொற்று** காரணமாக **ஊரடங்கு சட்டம்** சென்னை மாநகரம் முழுவதும் அறிவிக்கப்பட்டு எல்லா கம்பெனி, கடைகள் மூடப்பட்டன. அங்கு வேலை செய்த ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் கூலியில்லாமல் சொந்த ஊருக்கு செல்ல ராயிலும் இல்லை, பஸ்சும் இல்லாத சூழ்நிலையில் பட்டினியால் இருப்பதை கேட்டறிந்து அந்த விஷயத்தை தன் நண்பர்களுடன் பகிர்ந்துகொள்ள அவர்கள் யாவரும் **இங்கிலிஸ் வெஸ்லி சர்ச்சில்** ஆயர் அனுமதியுடன் ஒன்றுகூடி அவர்களுக்கு ஒரு வாரத்திற்கான ஆகாரத்திற்கு பல வீடுகளிலிருந்து கொடுத்து உதவிய அரிசி, கோதுமை, சர்க்கரை, உருளைகிழங்கு, காய்கறிகள், என்னை ஆகியவைகள் அடங்கிய பையை தயாரித்து அவரவர் இருப்பிடங்களுக்கு சென்று ஜெபத்தோடு உணவு பொருட்கள் கொடுக்கும் விவரம் எழுதியிருந்தேன். அதை வாசித்த பலர் தாங்களும் அந்த உதவி ஏற்பாட்டில் பங்குகொள்ள அந்த ஆடிட்டர் அவர்களின் தொலைபேசி எண். கேட்டிருந்தார்கள். அந்த ஆடிட்டர் சகோதரனின் தொலைபேசி எண். கொடுக்கிறேன். சகோ. **விலிங்ஸ்டன் நல்லதம்பி** 9840089909 Sundar Nagar, Gundi, Chennai (கிண்டி) சென்னை.

**சென்னையில் குடியிக்கும் நபர்கள் மட்டும்** இந்த நற்பணியில் பங்குபெற விருப்பம் உள்ளவர்கள், அரிசி, பருப்பு, சோப்பு போன்ற பொருட்களை **இங்கிலீஸ் வெஸ்லி சர்சில்** கொண்டுபோய் கொடுத்தால் போதும். பொருள் கொடுக்க முடியாதவர்கள் பணமாக கொடுத்தாலும் அதை செலுத்த வேண்டிய வழியை ஆடிட்டர் சகோதரனிடம் கேட்டு தெரிநந்துகொள்ளலாம். **கொரோனா தாக்கம்** இன்னும **பல மாதங்கள்** நீண்டு போகும் அறிகுறிகள்தான் காணப்படுகின்றன.

இந்த பொருள் உதவிகளை **மூன்று மாதத்துடன்** நிறுத்தத்தான் நினைத்தாரகள். ஆனால் கொரோனா தாக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை சென்னையில் கூடிக்கொண்டே பேகிறது. சென்னையில் இதேபோல பல இடங்களில் கிறிஸ்தவ குடுமபங்கள் பலராய் இணைந்து ஜெப குழுக்களாக ஆங்காங்கு வேலையில்லா குடும்பங்களுக்கு உதவிகளை செய்கிறதாக அறிந்தேன். அவர்கைள நான் பாராட்டுகிறேன். இப்படிப்பட்ட சேவைகள் செய்யும்போது எந்தவித கெட்ட பெயரும் வராதபடி பார்த்துக்கொள்ளுங்கள்.

பல திருமண்டல **மிஷனரி ஊழியங்களுக்கு** கொடுக்கப்படும் பணத்திலேயே **கொள்ளையடிக்கும்** திருமண்டல **நிர்வாகிகளைப்பற்றி** நிறைய குற்றச்சாட்டு எழும்பி உள்ளன. அதனால்தான் சபை மக்கள் தனிப்பட்ட முறையில் மிஷனரி பணிகளுக்கும், சமூக சேவைகளுக்கும் **ஜெபித்து செயல்படும் நபர்களை தேடி** தங்கள் பங்கை அள்ளி கொடுக்கிறார்கள்.

**திருச்சி – தஞ்சாவூர் பிஷப் Rt.Rev. Dr. C. சந்திரசேகரன்** அவர்கள் தாராபுரத்தில் உள்ள வேலை இழந்த வட இந்திய கூலி தொழிலாளி குடும்பங்கள் அவர்களோடு தாராபரம் சுற்றியுள்ள சுதந்திரமாக தனித்து இயங்கும் அனேக சிறிய சிறிய **பெந்தேகோஸ்தே** சபைகள் உண்டு. அவர்கள் பணக் கஷ்டத்தில் இருக்கிறார்கள். இந்த ஊரடங்கு நாட்களில் சபை ஜனங்கள் கூடிவர முடியாததால் அவர்களுக்கு **காணிக்கை** கிடைப்பதில்லை. அப்படிப்பட்ட பெந்தேகோஸ்தே சபை பாஸ்டர்களையும் வரவழைத்து அவர்களுக்கும் **ஒரு மாத சாப்பாட்டு சமையல் பொருள்களை** கொடுத்து உதவி வருவதாக கேள்விபட்டு தேவனை துதிக்கிறேன். **பிறந்த தேதிகளை** மறைத்து மாற்றி சம்பளம் பெற்ற உண்மையில்லாத CSI பிஷப்மார்களில் **திருச்சி பிஷப்** அவர்களும் **சென்னை ஆடிட்டரும்** அவர் **நண்பர்களும்** ஏழை **பெந்தேகோஸ்தே சபை பாஸ்டர்கள்,** மற்ற பெயரில் இயங்கும் **சபைகளின் ஊழியர்களையும்** அழைத்து **கிறிஸ்தவ அன்பை** அபிஷேகம் பெற்றேன் என்று கூறுபவர்களுக்கு **கிரியை மூலம் உதவிசெய்து** கிறிஸ்துவின் அன்பை வெளிப் படுத்தியதைப்போல **திருச்சி CSI பிஷப் அவர்களின்** இந்த உதவிகள் **சபை வித்தியாசம் பாராட்டாமல்** செய்தது புகழப்படதக்கதாகும்.



Rt. Rev. Dr.
D. Chandrasekaran

கர்த்தர் தாமே **பிஷப்** அவர்களையும் **திருமண்டலத்தையும்** சென்னையில் வேலை இழந்தவர்களுக்கு உதவி செய்யும் சகோ. லிவிங்ஸ்டன் நண்பர் குழுவினரையம் **ஜாமக்காரன்** வாசகர்கள் சார்பில் பாராட்டுகிறேன்.

☐வேதத்தில் **பவுல்** இப்படிப்பட்ட உதவி கேட்டு **பல சபைகளை** சந்திக்கிறார். **பவுல் அவர்கள்** மிக அதிகமான ஊழியம் செய்த **கொரிந்து சபை மக்கள்** பவுல் மூலமாக பல ஆவிக்குரிய நன்மைகள் அனுபவித்தாலும் பவுல் **நலிவுற்ற சபை மக்களுக்கு** உதவி செய்கிறார் என்று அறிந்தும், கொரிந்து சபை **பவுலுக்கு ஒன்றும் கொடுக்கவில்லை.** ஆனால் மிகவும் ஏழை சபையான **மக்கதொனியா** சபை மக்களும் **பிலிப்பு சபை மக்களும்** நிறைய உதவி தொகை கொடுத்தார்கள். ஆனால் பவுலால் நடத்தப்பட்ட சபையோ ஒன்றும் கொடுக்கவில்லை. ஆகவே வாசகர்கள் எதை செய்தாலும் கர்த்தருக்கென்றே செய்யுங்கள். கர்த்தரிடம் நன்மை பெற்றவர்கள் நன்றியுடையவர்களாக இருக்கவேண்டும். ஜெபிக்கிறேன்.


## ONLINE BANKING (NEFT)

**Dr. M.G.E. PUSHPARAJ**, **SALEM - 636 005. INDIA**

**STATE BANK OF INDIA** (SALEM-1970)

**A/C No: 10764116842** SWIFT CODE - SBININBB637- 10764116842
IFSC CODE - IFSC SBIN0001970 -10764116842

**CANARA BANK - SALEM** (SURAMANGALAM BRANCH)

**A/C No: 1219101013622.** SWIFT CODE - CNRB0001219 -1219101013622.
IFSC CODE - IFSC CNRB0001219- 1219101013622.

# TRIBAL MISSION

## புதிய நிர்வாகிகள் தேர்தெடுப்பு

டிரைபல் மிஷன் நிர்வாக கமிட்டியும் தலைவர்களை தெரிந்தெடுக்கும் பொதுக்குழு கூட்டமும் ஏற்கனவே அறிவித்தபடி 2020 ஜுலை 25ம் தேதி சனிக்கிழமை ஆசீர்வாதத்தோடு நடந்தேரியது.

கொரோனா லாக்டவுன் நேரத்தில் வாகனங்கள் ஓடாத சூழ்நிலையில் கடந்த ஆண்டு வருடாந்திர ஊழிய விபரம், ஆடிட்டர் ரிப்போர்ட் வாசிக்கப்பட்டு அது அங்கீகரிப்பட்டது. அப்படியே 2020-2021ம் வருடத்துக்கான நிர்வாக தலைவர்ரையும் மற்றும் அங்கத்தினர்கள் தெரிந்தெடுத்த

*President* .................................. Mr. **MATHEW JACOB**
*Vice President* ........................... **CDR. JACOB MALAYATTU**
*General Secretary* ....................... **Dr. MURALIDAR**
*Administrative Secretary.* ........... Mr. **K.PAULOSE**
*Treasurer* ................................... Mr. **MATHEW ABRAHAM**
*Prayer Secretary* ........................ Mr. **RAJU**
*Promotional Secretary* ................ **1.** Mr. **SAJU GEORGE**
Mr. **MANI KURIAKOSE**
*Members* .................................... **7** நபர்கள்

கூட்ட ஆரம்பத்தில் பொதுச்செயலாளர் Dr. Muralidar அவர்கள் வரவேற்புரை வழங்கினார் தெரிந்தெடுக்கப்பட்ட புதிய நிர்வாகிகளுக்காக ஜெபிப்போம், குறிப்பாக Dr. Muralidar (பொதுச்செயலாளயர்) அவர்களுக்காக ஜெபிப்போம்.

### தடைகள்

பல மாதங்களுக்கு முன்பே இந்த பொதுக்குழு கூடியிருக்க வேண்டும். அதற்குள் கொரோனா தடைகள் உண்டானது. ஆனால் இந்த தடைகளைவிட டிரைபல் மிஷன் பழைய நிர்வாக குழுவில் இடம் பெற்ற தலைவர் (President) பதவியில் இருந்த ஒரு ஹோமியோ டாக்டர் **இடிக்குலா** என்வர் பொதுச் செயலாளரை கலந்தாலோசிக்காமல் தன் இஷ்டத்துக்கு மிஷனரிகளை இடமாற்றம் செய்வது போன்ற விஷயங்களில் சில மனத்தாங்கள் ஏற்பட்டது. மிஷனரிகளிடம் இரக்கத்துடன் நடத்தகொள்ளமாட்டார். தலைவர் பதவிக்குள்ளான அதிகார எல்லை அவர் ஏற்றுக்கொள்வதில்லை. அதன் காரணமாக பொதுக் குழு நடத்தினால் தன் பதவி போய்விடும் என்பதால் பொதுக்குழு நடத்த விடாமல் தடுக்க பல யுத்திகளை கையாணடர் .

கர்த்தர் அந்த தடையையெல்லாம் நீக்கி பொதுக்குழு வெற்றிகரமாக நடக்க உதவினார்.

கடைசியாக பொதுக்குழுவுக்கு வர இயலாதவர்களுக்காக Proxy Cards என்ற முறையை உபயோகித்து பொதுக்குழு அங்கத்தினர்கள் எல்லாருக்கும் அனுப்பப்பட்டது. அந்த முறையில் 42 அங்கத்தினர்கள் தங்கள் ஒப்புதலை அனுப்பினர். நேரில் வந்தவர்கள் 14 அங்கத்தினர்கள் ஆக மொத்தம் 56 அங்கத்தினர்கள். கொரம் கணக்குப்படி 55 நபர்கள் எண்ணிக்கை இருக்க வேண்டும். 55 எண்ணிக்கைக்குமேல் கோரம் இருந்ததால் எல்லா திட்டங்களையும் நிறைவேற்ற முடிந்தது. கர்த்தருக்கு மகிமை உண்டாவதாக.

II சாமு 17:14ல் **எழுதியப்படி அகிதாபோலின் ஆலோசனைகளை ஆண்டவரே அபத்தமக்குகிறதற்கு கட்டளையிட்டாரே.**

டிரைபர் மிஷன் ஆரம்ப நாட்களிலிருந்து என்னோடு ஒத்துழைத்து Dr. முரளிதர் மட்டும் தனி மனிதனாக மலை மலையாய் ஏறி மிஷனரிகளையும், சபைகபளையும் உற்சாகப்படுத்தி ஆதவாசி பிள்ளைகள் படிக்கவும், மிஷனரி பிள்ளைகள் படிக்கவும், மெட்ரிகுலேசன் பள்ளிகளையும், தங்கி படிக்க ஹாஸ்டல் வசதிகளை ஏற்படுத்தி அதற்கான செயலவுகளுக்கும், ஆசிரியர்களின் சம்பளத்துக்கும், ஆதிவாசி மக்களுக்காக ஆஸ்பத்திரிகளைபணிது அதற்கான டாக்டர்களின் சம்பளத்துக்கும் ஊர் ஊராக சென்று கூட்டங்களில் பகிர்ந்துகொண்டு வெளி நாடுகளுக்கு சென்று டிரைபல் மிஷன் தேவைகளுக்காக கையெந்தி பிச்சை எடுப்பதுபோல் அலைந்த Dr. முரளிதர் அவர்களை வெகு அனாவசியாக தூக்கி எரிந்து டிரைபல் மிஷனை அழிக்க நினைத்த பதவிவெறி அதிகார வெறியுடன் அலைந்த அந்த நபர்களின் திட்டங்களையெல்லாம் கர்த்தர் தோல்வியடைய செய்தார். இவர்கள் டிரைபல் மிஷன் எப்படி ஆரம்பக்கப்பட்டது என்ற சரித்திரமே அறியாதவர்கள். ஆனால் பதவிக்காக பெயருக்காக, பெருமைக்காக உள்ளே நுழைந்தவர்கள், கர்த்தர் ஜெயம் எடுத்தார். கர்த்தருடை நாமத்துக்கு ஸ்தோத்திரம். நெகே. 2:18, நெகே. 6:9, எஸ்றா 1:5. இந்த பெரும் ஊழியத்துக்காக உழைத்தவர்கள், கொடுத்தவர்கள், அலைந்தவர்கள், கஷ்டப்பட்டவர்கள் அனைவரையும் கர்த்தர் ஆசீர்வதிப்பாராக. *தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :*

TRIBAL MISSION, Iringol (P.O.) Perumbavoor - 683 548 email: tribalmission@hotmail.com

*வங்கி விபரம்* :

TRIBAL MISSION **- SBI** Town Branch - SB A/C : 57041605654 - IFSC SBIN0070154

TRIBAL MISSION -**Axis Bank Ltd.,** Perumbavoor, SB A/C: 910010028193291- IFSC: UTIB0000803

*வெளிநாட்டில் வசிப்பவர்கள் :*

**Indian Overseas Bank,** Perumbavoor SB A/C. 006901000008239 Swift Code : IOBAINBB024

கர்த்தருடைய கிருபை உங்கள் அனைவரோடும் இருப்பதாக.

## ஜாமக்காரன்

ஜுன் மாத ஜாமக்காரன் **ஆகஸ்ட்** மாதம்தான் வெளியிட முடிகிறது. அப்படியே ஜுலை மாத ஜாமக்காரன் ஆகஸ்ட் மாதத்துக்குள் வெளியிட முயலுகிறேன். சிலர் ஆலோசனை கொடுத்தது போல இரண்டு மாத ஜாமக்காரனையும் ஒரு புத்தகத்தில் வெளியிட கூடாது.

பத்திரிகை சம்பந்தமான டெல்லி அலுவலகத்தில் அப்படி இரண்டு மாத பத்திரிகையை ஒன்றாக வெளியிட ஒத்துக்கொள்ளமாட்டார்கள். ஒவ்வொரு மாதமும் வெளியிடும் ஜாமக்காரன் (தமிழ் – மலையாளம்) இரண்டு புஸ்தகங்களையும் தனித்தனியாக கவரில் வைத்து ரிஜிஸ்டர் போஸ்டில் டெல்லி அரசாங்க அலுவலகத்துக்கு அனுப்பியாக வேண்டும். இந்திய அரசாங்கம் RNI அங்கீகாரம் பெற்ற பத்திரிகைகளை கவனிக்கிறார்கள். ஆகஸ்ட், செப்டம்பர் மாதத்திற்குள் ஒவ்வொரு மாதமும் குறிப்பிட்ட நாளில் வெளியிட முயலுகிறேன்.

நீங்கள் Online (NEFT) மூலமாக அனுப்பிய காணிக்கை உரிய நேரத்தில் எனக்கு கிடைத்தது, மிக்க நன்றி. இந்த கொரோனா நாட்களில் வாசகர்கள் அனைவருக்காவும் ஆத்திரமில்லாமல் அவசரமில்லாமல் உங்கள் எல்லாருக்காகவும் நீங்கள் அனுப்பிய தொலைபேசி வழியாக கூறிய எல்லா ஜெப குறிப்புகளுக்காகவும் ஜெபிக்க முடிகிறது.

கர்த்தர் உங்கள் யாவரையும் ஆசீர்வதிப்பாராக.

**விஷ்வ வாணி ஸ்தாபகரும். FMPBயின் ஆரம்ப கால பொதுச் செயலாளருமான**
**சகோ. எமில் ஜெபசிங் அவர்களின் சிந்தனை வரிகள்**

- கண்களை திறந்தும் காலால் நின்றும் – மனிதனிடம் கண்களை மூடியும் முழங்காலில் நின்றும் தேவனிடம் !
- **தன் காலில்** நிற்பவர்கள் **தாழ்வார்கள்** – **முழங்காலில்** நிற்பவர்கள் **உயர்வார்கள்.**
- **சாவி இல்லாமல்** சிறைக் கதவுகளைத்திறப்பதே ஜெபம் – **பூட்டு இல்லாமல்** சிங்கங்களின் வாய்களைக் **பூட்டுவதே ஜெபம்**
- **உலகத்தில் உயர்வதற்கு** – உபாயங்கள் செய்வார் உண்டு – உதாரணம் **ஆமான்**
  – **உபவாசித்து** ஜெபிப்பவரும் உண்டு. – உதாரணம் **எஸ்தர்.**
- **தேவனிடத்தில பேச பேச** இருதயம் **பெலப்படும்** – **மனிதனிடம் பேச பேச** இருதயம் **பெலவீனப்படும்**
- **இருதயத்தில்** சுத்தம் உள்ளவர்கள் **தேவனைத் தரிசிப்பார்கள்** – **முழங்காலில்** நிற்பவர்களே இருதயத்தில் **சுத்தம் காண்பார்கள்**

**JUNE 2020**

# Printed Book (Periodical)


**RNI Reg. No. TNBIL/2016/70171**

**Annual Subscription:**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**


**Return Requested:**


**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**



Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.